Find us on facebook/tamilmirror Follow us on tamilmirror epaper/tamilmirror.lk

தமிழ்Mirror www.tamilmirror.lk

MONDAY, AUGUST 25 2025

திங்கட்கிழமை 25, ஓகஸ்ட் 2025 | ஒளி: 11 கதிர் 035 | பக்கம்:06 | நகரப்பதிப்பு FREE

# "ரணிலுக்கு மாரடைப்பு ஏற்படலாம்"

## அவருக்கு முறையாக சிகிச்சை அளிக்காவிட்டால் அந்த சிக்கல்கள் உருவாகக்கூடும்



முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தற்போது தேசிய மருத்துவமனையில் மருத்துவ மேற்பார்வையின் கீழ் சிகிச்சை பெற்று வருவதாக கொழும்பு தேசிய மருத்துவமனையின் பிரதி பணிப்பாளர் வைத்தியர் ருக்ஷான் பெல்லன தெரிவித்துள்ளார்.

ரணிலின் உடல்நிலை குறித்து வைத்தியர் ருக்ஷான் பெல்லன, ஞாயிற்றுக்கிழமை(24) அன்று நடத்திய ஊடக சந்திப்பிலேயே இவ்வாறு கூறியுள்ளார்.

அவருக்கு நீர்ச்சத்து குறைபாடு இருப்பதாகவும், அவரது உடலில் இரத்தத்தில் ஏற்படும் மாற்றங்கள் மற்றும் பிற அறிகுறிகள் காணப்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

நீதிமன்ற அறையில் பல மணி நேரம் காத்திருந்தபோது, மின்சாரம் தடைபட்டதாலும், தண்ணீர் குடிக்காததாலும் ஏற்பட்ட சிக்கல்களால் அவருக்கு நீர்ச்சத்து குறைபாடு ஏற்பட்டதாக மருத்துவர் குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ச்சி P12

# குதிக்கிறது GMOA: தபால் திரும்பியது

மருத்துவஇடமாற்றசெயல்முறைஉட்படபலகோரிக்கைகளைமுன்வைத்துஅரசாங்கமருத்துவஅதிகாரிகள்சங்கம் (GMOA) இன்று திங்கட்கிழமை(25) காலை 8.00 மணிமுதல் நாடுதழுவியவேலைநிறுத்தத்தில்ஈடுபடவுள்ளது.

எனினும், அத்தியாவசிய நடவடிக்கைகளில் இருந்து விலகமாட்டார்கள் என அந்த சங்கம் அறிவித்துள்ளது.

இதேவேளை, கடந்த 17ஆம் திகதி முதல் முன்னெடுக்கப்பட்ட தபால் வேலைநிறுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவர தொழிற்சங்கங்கள் உடன்பாடு தெரிவித்துள்ளதாக சுகாதார மற்றும் ஊடக அமைச்சகம் தெரிவித்துள்ளது.

சுகாதார மற்றும் ஊடக அமைச்சர் டாக்டர் நளிந்த ஜயதிஸ்ஸவுடன் நடைபெற்ற கலந்துரையாடலின் போது இந்த உடன்பாடு எட்டப்பட்டது.

கைரேகை இயந்திரங்களை நிறுவும் திட்டத்திற்கு தொழிற்சங்கங்கள் உடன்பாடு தெரிவித்துள்ளதாகவும், தற்போதுள்ள மேலதிக நேர கொடுப்பனவுகளை அவ்வாறே முன்னெடுத்துச் செல்ல இணக்கம் தெரிவித்துள்ளனர் என்றும் ஊடக அமைச்சின் செய்தித் தொடர்பாளர் தெரிவித்தார்.

# "ஜனநாயக கட்டமைப்புக்கு பெரும் ஆபத்து"



முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் கைது குறித்து எச்சரிக்கை விடுத்துள்ள முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க, இது இலங்கையின் ஜனநாயக கட்டமைப்பிற்கு பெரும் ஆபத்தை ஏற்படுத்துகிறது என்று எச்சரித்துள்ளார்.

கொழும்பில் உள்ள அமரி ஹோட்டலில் கட்சித் தலைவர்களின் பங்கேற்புடன், ஞாயிற்றுக்கிழமை (24) அன்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்புக்கு அனுப்பிவைத்திருந்த செய்தியிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இந்த செய்தியை முன்னாள் அமைச்சரும் ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளருமான தலதா அத்துகோரளை வாசித்துள்ளார்.

அதில், இந்த நடவடிக்கை ஜனநாயக விழுமியங்கள் மீதான வேண்டுமென்றே நடத்தப்பட்ட தாக்குதல் என்றும், அதன் தாக்கம் ஒரு தனிநபர் அல்லது அரசியல் கட்சிக்கு அப்பாற்பட்டது என்றும் தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P12

# "ஜனநாயகம் குழிதோண்டி புதைக்கப்படுகிறது"



முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க கைது செய்யப்பட்டதன் மூலம் இலங்கையின் ஜனநாயகம் குழிதோண்டி புதைக்கப்படத் தொடங்கிவிட்டதாக முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

ரணில் விக்ரமசிங்கவை சிறையில் இருந்து விடுவிக்க அனைத்துக் கட்சிகளும் போராடும் என்றும் குறிப்பிட்டார்.

கொழும்பில் உள்ள அமரி ஹோட்டலில் ஞாயிற்றுக்கிழமை (24) அன்று எதிர்க்கட்சித் தலைவர்களின் கூட்டு செய்தியாளர் சந்திப்பைத் தொடங்கி வைத்து கருத்துரைத்த போதே முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அதில், "ஜனநாயக சமூகத்தின் பண்புகள் படிப்படியாக மறைந்து வருகின்றன என தெரிவித்த மைத்திரிபால சிறிசேன, அரசியல் கட்சிகள், நிறங்களை மறந்து ஜனநாயகத்தைப் பாதுகாக்க இந்த நேரத்தில் நாம் ஒன்றுபட வேண்டும். ஜனநாயகத்தைப் பாதுகாக்க அனைவரும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும்" எனவும் அழைப்பு விடுத்தார்.



# 'நீதியின் ஒலம்'


யாழ்ப்பாணம், செம்மணியில் 9 கோரிக்கைகளை முன்வைத்து முன்னெடுக்கப்பட்ட 'நீதியின் ஒலம்' என்ற கையெழுத்து போராட்டம் இரண்டாவது நாளாக ஞாயிற்றுக்கிழமையும் (24) முன்னெடுக்கப்பட்டது

குறித்த போராட்டமானது, மாணவி கிருசாந்தி கொலைச் சம்பவத்துடன் தொடர்புடைய, செம்மணி பகுதியில் பிரத்தியேகமாக ஒழுங்கு செய்யப்பட இடத்தில் சனிக்கிழமை (23) அன்று முன்னெடுக்கப்பட்டிருந்தது.

இதேவேளை, மன்னாரில் மேற்கொள்ளப்படும் கனிய மணல் அகழ்வுக்கு எதிராக வவுனியா இளைஞர்களின் ஏற்பாட்டில், சுற்றுச் சூழலுக்கான இளைஞர் நடவடிக்கை அமைப்பின் பங்கேற்பில் போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

– நிதர்ஷன் வினோத்

# துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் பலி; ஒருவர் காயம்



பொரலஸ்கமுவ, மாலனி புலத்சிங்கள மாவத்தையில், ஞாயிற்றுக்கிழமை (24) அதிகாலை நடந்து சென்றுக்கொண்டிருந்த இருவர் மீது, முச்சக்கர வண்டியில் வந்த இருவர் துப்பாக்கிச் சூடு நடத்தியதாக பொரலஸ்கமுவ பொலிஸார் தெரிவித்தனர்.

காயமடைந்த இருவரும் சிகிச்சைக்காக களுபோவில போதனா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர், அவர்களில் ஒருவர் உயிரிழந்துள்ளதாக பொரலஸ்கமுவ பொலிஸார் தெரிவித்தனர்.

துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்த மற்றொருவரின் நிலை தற்போது சீராக இருப்பதாக பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர் கல்கிஸ்ஸை, டெம்பிள் வீதியைச் சேர்ந்த ஷெஹான் துலான் பெரேரா(21) என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இறந்த இளைஞர், பொரலஸ்கமுவ பரலாஸ் மைதானத்தில் இசை நிகழ்ச்சியைக் கண்டுகழித்துவிட்டு வீடு திரும்புவதற்காக மற்றொரு குழுவுடன் மாலனி புலத்சிங்கள மாவத்தை வழியாக நடந்து சென்று கொண்டிருந்தபோது,

தொடர்ச்சி P12

# "யூடியூப்பர் கணித்தது"

## அமைச்சர் விளக்கம்



அரசாங்கம் எந்தவொரு நீதிமன்ற நடவடிக்கைகளிலும் தலையிடவில்லை என்றும், அனைத்து நிறுவனங்களுக்கும் சுயாதீனமாக விசாரணைகளை மேற்கொள்ள இடம் வழங்கப்பட்டுள்ளதாகவும் சுகாதார மற்றும் ஊடக அமைச்சரும் அமைச்சரவைப் பேச்சாளருமான நலிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க கைது செய்யப்படுவார் என்று கணித்த யூடியூபர் ஒருவர் தெரிவித்த கருத்துக்கள் குறித்து ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்கு பதிலளிக்கும் போது அவர் இந்தக் கருத்துக்களை குறிப்பிட்டார்.

"சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்குத் தேவையான வசதிகளை வழங்குவது மட்டுமே அரசாங்கத்தின் பொறுப்பு. நிதி மோசடி, குற்றம் அல்லது ஊழல் என எதுவாக இருந்தாலும், விசாரணைகள் தலையீடு இல்லாமல் சுதந்திரமாக நடத்தப்படுகின்றன. சட்டம் அனைவருக்கும் அவர்களின் அந்தஸ்தைப் பொருட்படுத்தாமல் சமமாகப் பொருந்தும் என்பதற்கு இந்த வழக்கை ஒரு உதாரணமாகக் காணலாம்," என்று ஜெயதிஸ்ஸ கூறினார்.

மேலும் கருத்து தெரிவித்த அவர், இதேபோன்ற கணிப்புகள் இதற்கு முன்பும் கூறப்பட்டதாகக் குறிப்பிட்டார், ஊடகவியலாளர் விக்டர் ஐவனும் நீதிமன்றத் தீர்ப்பு குறித்து முன்கூட்டியே கருத்து

தொடர்ச்சி P12

# ரணிலுக்கு அதியுச்ச பாதுகாப்பு

## ஆயுதங்களுடன் எட்டு அதிகாரிகள்



கொழும்பு தேசிய மருத்துவமனையின் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ள முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவைப் பாதுகாக்க, இரண்டு ஜெயிலர்கள் உட்பட எட்டு சிறை அதிகாரிகள் ஆயுதங்களுடன் நிறுத்தப்பட்டுள்ளதாக சிறைச்சாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

மேலும், மருத்துவமனையைச் சுற்றி சிறப்பு பொலிஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

தடுப்புக்காவலில் வைக்கப்பட்ட பின்னர், மருத்துவ பரிந்துரைகளின் பேரில் முன்னாள் ஜனாதிபதி கொழும்பு தேசிய மருத்துவமனையின் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டார்.

அவரது உடல்நிலை சீரடைந்தவுடன் அவர் மீண்டும் வெலிக்கடை சிறைச்சாலை மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்படுவார் என்று சிறைச்சாலை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

தொடர்ச்சி P12

# "பழிவாங்கும் அரசியலை கைவிட வேண்டும்"

## இந்திய எம்.பி. கடும் அறிவுறுத்தல்



"பழிவாங்கும் அரசியலை கைவிட வேண்டும்"என இலங்கை முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கே கைதுக்கு இந்திய தேசிய காங்கிரஸ் எம்.பி. சசி தரூர் கருத்து தெரிவித்துள்ளார்.

அரசு நிதி முறைகேடு வழக்கில், கைது செய்யப்பட்ட இலங்கை முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கு, உடல் நலக்குறைவு ஏற்பட்டதையடுத்து, தீவிர சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இவரது கைதுக்கு, காங்கிரஸ் எம்.பி. சசி தரூர் கவலை தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P12

### நீதிமன்றத் தீர்ப்புகளை

# யூடியூபர்கள் முன்கூட்டியே அறிவிப்பதுதான் மாற்றமா?

■ சஜித் பிரேமதாச கேள்வி



நீதியை நிலைநாட்டும் செயற்பாடும், சட்டத்தின் ஆட்சியும் ஜனநாயக ரீதியாகவும், முறையாகவும் முன்னெடுக்கப்பட வேண்டும். எல்லோரும் சரியான வழிமுறையைப் பின்பற்றியொழுக தயாராக இருந்தாலும், யூடியூப் மூலம் வழங்கப்படும் நீதியின் நியாயத்தன்மை குறித்து எந்தவித ஒருமித்த கருத்தும் இல்லை. நீதிமன்றத்தால் பெற்றுத்தரப்படும் தீர்ப்புக்கள் மற்றும் நீதியை நிலைநாட்டும் செயற்பாடுகள் தொடர்பில் பல நாட்களுக்கு முன்பே, அரசியல் கட்சி சார் யூடியூப் ஆர்வலர்கள் முன்கூட்டியே

தொடர்ச்சி P12

# "விளக்கை அணைத்து விளையாட வேண்டாம்"



இந்த அரசாங்கத்தால் முன்னெடுக்கப்பட்டிருக்கும் ரணில் விக்ரமசிங்கவுக்கு எதிரான பழிவாங்கலை தமிழ் மக்கள் கண்டிப்பதாக தமிழ் முற்போக்கு அமைப்பின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் தெரிவித்தார்.

தொடர்ச்சி P12

PAGE 1 தொடர்ச்சிகள்

# “ரணிலுக்கு மாரடைப்பு ஏற்படலாம்”

இதன் காரணமாக, அவர் சிறைச்சாலை மருத்துவமனையில் இருந்து தேசிய மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளதாகவும், அதன்படி, முன்னாள் ஜனாதிபதி கடுமையான மருத்துவ மேற்பார்வையின் கீழ் கொழும்பு தேசிய மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருவதாகவும் தெரிவித்துள்ளார்.

எனவே, அவரை மூன்று நாட்கள் கடுமையான ஓய்வில் வைத்து, நீர்ச்சத்து குறைபாட்டிற்கு சிகிச்சையளிக்க வேண்டும்.

அது செய்யப்படாவிட்டால், இதயப் பிரச்சினைகள், சிறுநீரகப் பிரச்சினைகள் மற்றும் பிற சிக்கல்கள் ஏற்படக்கூடும். அதனால்தான் அவர் தற்போது பல சிறப்பு மருத்துவர்கள் குழுவால் உன்னிப்பாகக் கண்காணிக்கப்படுகிறார்.

இரண்டு அல்லது மூன்று நாட்களில் அவர் குணமடைவார் என்று நாங்கள் நம்புகிறோம். அவருக்கு முறையாக சிகிச்சை அளிக்காவிட்டால் அந்த சிக்கல்கள் உருவாகக்கூடும் என தெரிவித்துள்ளார்.

## யூடியூபர்கள் முன்கூட்டியே அறிவிப்பதுதான் மாற்றமா?

எவ்வாறு கருத்து வெளியிடுவர் என்பது குறித்து பிரச்சினை காணப்படுகின்றது. இவ்வாறான விடயமொன்று நடக்கக்கூடாது என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

இது நீதிமன்றத்துக்கும், நீதியை நிலைநாட்டும் செயற்பாட்டுக்கும், அரசியலமைப்புக்கும் மற்றும் உச்ச சட்டத்தையும் அவமதிக்கும் செயலாகும். முறைமையில் மாற்றத்தைக் கொண்டு வருவோம் என கூறி, இதனையா செய்துள்ளீர்கள் என கேள்வி எழுப்புகிறோம். அரசியலமைப்பின் சட்டங்கள் அல்லது நீதியை நிலைநாட்டும் செயற்பாட்டுப் பொறிமுறையில் காணப்படும் சட்ட ஒழுங்கு விதிகளை செயல்படுத்தும் நடவடிக்கையில் வெளிப்படைத்தன்மையும் நேர்மையும் இருக்க வேண்டும். நீதியை நிலைநாட்டும் செயல்பாட்டில் எடுக்கப்பட்ட முடிவுகளை ஒரு அரசியல் யூடியூபர் முன்கூட்டியே அறிவிப்புச் செய்ய முடியாது. சர்வாதிகாரம் ஆட்சி செய்யும் நாட்டில் மட்டுமே இதுபோன்ற ஒரு விடயம் நடக்கும். ஆனால், நம்மைப் போல ஜனநாயகம் ஆட்சி செய்யும் நாட்டில் இதுபோன்ற ஒரு விடயம் நடக்க முடியாது என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் உடல்நிலை குறித்து நலம் விசாரிக்க எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தேசிய வைத்தியசாலைக்கு ஞாயிற்றுக்கிழமை (24) அன்று சென்றார்.

அவரை பார்வையிட்டு வெளியேறும் தருணத்தில் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளிக்கும் போதே இவ்வாறு குறிப்பிட்டார்.

மேலும், ஒரு யூடியூப் சேனல், கைது செய்யப்படவிருக்கும் நபரின் பெயர், கைது செய்யப்படும் திகதி மற்றும் அவர் சிறையில் கழிக்கப்போகும் நாட்களின் எண்ணிக்கையைக் கூட முன்கூட்டியே வெளியிடுவதானது, நீதியை நிலைநாட்டும் செயல்பாட்டில் ஈடுபட்டுள்ளவர்களை அவமதிக்கும் விதமாக அமைந்து காணப்படுகின்றது.

யூடியூப் சேனல்கள் மூலம் நீதியை நிலைநாட்டும் செயல்முறையை மேற்கொள்ள ஐக்கிய மக்கள் சக்தி தயாராக இல்லை. சட்டத்தை அமுல்படுத்துவதில் சகலரையும் சமமாக நடத்துவது பிரச்சினைக்குரிய விடயமல்ல. என்றாலும், அரசியல் யூடியூபர்கள் நீதியை நிலைநாட்டும் செயல்பாட்டில் செல்வாக்கு செலுத்துவது சட்ட ஒழுங்கு முறையில் அமைந்த விடயமொன்றல்ல.

தற்சமயம் எதிர்க்கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் கட்சிகள் ஒன்றாக இணைந்து கலந்துரையாடல்களை நடத்துவது வெறுமனே அரசியல் ஆதாயம் பெறுவதற்காகவல்ல. நாட்டில் சுமார் 50% ஆனோர் தற்போது ஏழ்மை நிலையில் இருந்தாலும், சுமார் 75% ஆனோர் அஸ்வெசும நிவாரணத்தைக் கோரி விண்ணப்பித்துள்ளனர்.

2028ஆம் ஆண்டுக்குள் கடனை திருப்பிச் செலுத்த வேண்டுமானால் 5% பொருளாதார வளர்ச்சி தேவை, நாட்டில் இதற்கான விடயம் நடப்பதாக இல்லை. நுண், சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாண்மைகள் வீழ்ச்சி கண்டுள்ளன. இவ்வாறான நிலைமைகளுக்கு மத்தியில் நாட்டின் பிரச்சினைகளுக்கு இந்த அரசாங்கத்திடம் பிரயோக ரீதியான எந்தத் தீர்வுகளும் இல்லை. இத்தகைய சூழ்நிலைக்கு மத்தியில் எம்மால் முன்னோக்கிச் செல்ல முடியாது. 2028 முதல், வருடாந்தம் அமெ.டொ. 5.5 பில்லியன் ரூபா கடனைச் செலுத்த வேண்டி காணப்படுகின்றது. இதற்கான பலம் இயலுமை நமது நாட்டிடம் உள்ளதா என்று நாம் கேள்வி எழுப்ப வேண்டும்.

இந்த அரசாங்கம் தற்போது போகும் போக்கைப் பார்த்தால், 2028ஆம் ஆண்டுக்குள் மீண்டுமொரு புதிய வங்குரோத்து நிலை உருவாகக்கூடும் என்ற அச்சம் காணப்படுகிறது. தற்போது போகும் இந்த முறை பொருத்தமான முறையல்ல. இந்த போக்கால் நாட்டைக் கட்டியெழுப்பும் இலக்குகளை அடைய முடியாது. இந்த பிரச்சினைகளுக்கு அரசாங்கம் தீர்வுகளைப் பெற்றுத் தருவதாக இல்லை. எதிர்க்கட்சி கூட நாட்டைக் கட்டியெழுப்பும் கருத்துகளின் அடிப்படையிலயே முன்வருகின்றன. நாட்டைக் கட்டியெழுப்பும் கொள்கைத் தொகுப்பின் அடிப்படையில் ஒன்று சேருவோமே தவிர, அதிகாரத்தைப் பெறுவதற்கோ அல்லது பதவிகளைப் பகிர்ந்து கொள்வதற்கோ நாம் ஒன்று சேர மாட்டோம் என எதிர்க்கட்சித் தலைவர் இங்கு மேலும் தெரிவித்தார்.

## “பழிவாங்கும் அரசியலை கைவிட வேண்டும்”

இது குறித்து காங்கிரஸ் எம்.பி. சசி தரூர் சமூக வலைத்தளத்தில் வெளியிட்டுள்ள பதிவில், இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவை, மேலோட்டமாகப் பார்த்தால், அற்பமான குற்றச்சாட்டுகளின் பேரில் கைது செய்திருப்பது குறித்து கவலை கொள்கிறேன்.

உடல்நலப் பிரச்சினைகள் காரணமாக அவர் ஏற்கெனவே சிறை மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளார். இது அவர்களின் உள் விவகாரம் என்பதை முழுமையாக மதிக்கும் அதே வேளையில், பழிவாங்கும் அரசியலை இலங்கை அரசு கைவிட வேண்டும். முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க பல தசாப்தங்களாக தேசத்திற்குச் சேவை செய்துள்ளார். அவர் மரியாதை மற்றும் கண்ணியத்துடன் நடத்த வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன் என கூறியுள்ளார்.

## “யூடியூப்பர் கணித்தது”

தெரிவித்த ஒரு சந்தர்ப்பத்தை மேற்கோள் காட்டினார்.

“சில வழக்குகள் எவ்வாறு தொடர்கின்றன என்பதைப் பொறுத்து, யார் வேண்டுமானாலும் கணிப்புகளைச் செய்யலாம். சிலர் பிணை வழங்கப்படும் என்று நினைக்கலாம், சிலர் அது கிடைக்காது என்று நினைக்கலாம். இவை யூகங்களைப் போன்றவை - சில நேரங்களில் அவை சரியாகவும், சில நேரங்களில் தவறாகவும் மாறும். ஆனால் இதுபோன்ற கணிப்புகள் செல்வாக்கு செலுத்துவதாக யாராவது சொன்னால், அது நீதிமன்ற அவமதிப்புக்கு சமமாகும்,” என்று அமைச்சர் மேலும் கூறினார்.

## துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் பலி; ஒருவர் காயம்

முச்சக்கர வண்டியில் வந்த இருவர் துப்பாக்கிச் சூடு நடத்தி தப்பிச் சென்றதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இசை நிகழ்ச்சியின் போது ஒரு குழுவினருடன் மோதிய இளைஞனை, பழிவாங்கும் நோக்கில் இந்த துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டிருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

துப்பாக்கிச் சூடு நடத்தியவர்கள் வந்த முச்சக்கர வண்டி, பிலியந்தலை, போகுந்தர பொருளாதார மையத்திற்கு அருகில் கைவிடப்பட்ட நிலையில் கைப்பற்றப்பட்டதாக பொரலஸ்கமுவ பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

முச்சக்கர வண்டிக்குள் கருப்பு நிற தலைக்கவசங்கள் இரண்டும் ஒரு கருப்பு ஜாக்கெட்டும் இருந்தன எனத்தெரிவித்த பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்தனர்.

## “ஜனநாயக கட்டமைப்புக்கு பெரும் ஆபத்து”

இந்த வளர்ச்சி ஒட்டுமொத்த சமூகத்தின் உரிமைகளை குறைமதிப்பிற்கு உட்படுத்துகிறது என்றும், அனைத்து அரசியல் தலைவர்களையும் அத்தகைய நடவடிக்கைகளுக்கு எதிராக நிற்குமாறும் அவர் வலியுறுத்தினார்.

அத்துடன், ஜனநாயகத்தை பலவீனப்படுத்தும் முயற்சிகள் என்று அவர் விவரித்ததற்கு ‘அடக்கமற்ற எதிர்ப்பை’ வெளிப்படுத்தியுள்ள குமாரதுங்க, கூட்டு எதிர்ப்பிற்கும் அழைப்பு விடுத்துள்ளார்.

## ரணிலுக்கு அதியுச்ச பாதுகாப்பு

இலங்கையில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட எட்டாவது ஜனாதிபதியாக இருந்த ரணில் விக்ரமசிங்க, குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினரால், வெள்ளிக்கிழமை (22) அன்று அழைக்கப்பட்டிருந்தார். அரச நிதியை முறைகேடாக பயன்படுத்தியமை தொடர்பிலான 4 மணிநேர விசாரணைக்குப் பின்னர், குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் நிதி விசாரணைப் பிரிவின் அதிகாரிகளால் வெள்ளிக்கிழமை பிற்பகல் 1:15 மணியளவில் கைது செய்யப்பட்டார்.

குற்றப் புலனாய்வு திணைக்களத்தில் இருந்து கைவிலங்கு இடப்படாத நிலையில், அழைத்து வரப்பட்ட ரணில் விக்ரமசிங்க, அன்றையதினம் பிற்பகல் 3 மணியளவில் கோட்டை நீதவான் நிலுபுலி லங்காபுர முன்னிலையில் ஆஜர்செய்யப்பட்டார்.

ரணில் விக்கிரமசிங்க, ஜனாதிபதியாக பதவிவகித்த காலத்தில், 2023 செப்டெம்பர் 13ஆம் திகதி முதல் 20ஆம் திகதி வரை, கியூபா மற்றும் அமெரிக்காவுக்கு உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டிருந்தார். அதன் பின்னர் இங்கிலாந்தில் உள்ள வுப்ஹாம்படன் பல்கலைக்கழகத்தில் 22ஆம் திகதி நடைபெற்ற நடந்த பட்டமளிப்பு விழாவில் கலந்துகொண்டுள்ளார். திருமதி விக்ரமஙிக்க கௌரவப்பட்டம் பெறும் விழாவிலேயே கலந்துகொண்டுள்ளார்.

இந்த விஜயத்தில் ஜனாதிபதி செயலக அதிகாரிகள் மற்றும் பொலிஸ் அதிகாரிகள் உட்பட 10 பேர் கலந்துகொண்டுள்ளனர். இந்த இரண்டு நாட்களிலும் அவர் தனிப்பட்ட விஜயத்தையே முன்னெடுத்திருந்தார். இதற்காக மொத்தமாக 166 இலட்சம் ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. இந்த செலவுத் தொகையில், ஜனாதிபதி செயலகம் 133 இலட்சம் ரூபாயையும் பொலிஸ் மற்றும் கடற்படை 33 இலட்சம் ரூபாயையும் செலுத்தியுள்ளன.

மேற்படி, குற்றச்சாட்டுகள் தொடர்பில், குற்றப்புலனாய்வு திணைக்களத்தினர், நீண்ட விளக்கத்தை நீதிமன்றத்தில் முன்வைத்தனர்.

இதன்போது நீதிமன்றத்தில் மின்சாரம் திடீரென தடைப்பட்டது. அதனை, இலங்கை மின்சார ஊழியர்கள் சரிசெய்தனர். நீண்ட விவாதத்துக்கு பின்னர், ரணில் விக்கிரமசிங்கவின் மனைவியின் உடல் நிலையை கருத்தில் கொண்டு பிணை வழக்குமாறு ரணில் சார்பில் ஆஜராகியிருந்த சட்டத்தரணிகள் நீதிமன்றில் கோரிநின்றனர்.

வாத,பிரதிவாதங்களை அவதானித்த கோட்டை நீதவான் நிலுபுலி லங்காபுர, முன்னாள் பிணை வழங்குவதா? இல்லையா? என்பது தொடர்பில் ஆராய்வதற்காக, அன்று மாலை 6.15 மணியளவில் நீதிமன்ற அமர்வை ஒத்திவைத்து, இரவு 9.50க்கு மீண்டும் ஆரம்பமாகும் என அறிவித்துவிட்டுச் சென்றார்.

அதன் பின்னர், ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவை, ஒகஸ்ட் 26ஆம் திகதி வரையிலும் விளக்கமறியலில் வைக்குமாறு இரவு 10.03 மணியளவில் உத்தரவிட்டார். இதனால், நீதிமன்ற வளாகத்தில் பதற்றமான நிலைமை ஏற்பட்டிருந்து. அங்கு குழுமியிருந்த ஆதரவாளர்கள் ரணிலுக்கு ஆதரவாக கோஷமெழுப்பினர். ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கவுக்கு எதிராகவும் கோஷமெழுப்பினர்.

விளக்கமறியல் உத்தரவுக்கு பின்னர் கைவிலங்கிடப்பட்ட முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, சிறைச்சாலை பஸ்ஸில் ஏற்றபட்டு, புதிய மகசின் சிறைச்சாலைக்கு கொண்டுசெல்லப்பட்டார். எனினும், ரணிலின் உடல்நிலை மோசமாக இருந்தமையால், சிறைச்சாலை வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

எனினும், ரணில் விக்ரமசிங்கவின் உடல்நிலையை கருத்தில் கொண்டு, கொழும்பு தேசிய வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவுக்கு சனிக்கிழமை (23) பிற்பகல் மாற்றப்பட்டார். அவருக்கு அவசர சிகிச்சைப் பிரிவில் தொடர்ந்தும் சிகிச்சையளிக்கப்பட்டு வருகின்றது.

அவரை முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச உள்ளிட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள், எதிர்க்கட்சியின் இந்நாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் சிறைச்சாலைக்கும், வைத்தியசாலைக்கும் சென்று பார்வையிட்டனர்.

## “ஒரு பாம்பை காயப்படுத்தி, அதை கொல்லாவிட்டால், அது திருப்பித் தாக்கும்”

“ஒரு பாம்பை காயப்படுத்தி, அதைக் கொல்லாவிட்டால், அது திருப்பித் தாக்கும்” என்று முன்னணி சோசலிசக் கட்சி (FLSP), தெரிவித்துள்ளது. முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கே கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ள விவகாரம் தொடர்பில் கருத்துரைக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது.

முன்னணி சோசலிசக் கட்சியின் முன்வரிசை உறுப்பினர் துமிந்த நாகமுவ தெரிவிக்கையில், அரசாங்கம் இராஜதந்திர சமூகத்தின் சில பிரிவுகளின் அழுத்தத்தை மீறி ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க முன்வந்ததாகக் கூறினார்.

இதற்காக அரசாங்கத்தைப் பாராட்டிய அவர், ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக அரசாங்கம் எடுக்கும் மேலதிக நடவடிக்கைகளை தமது கட்சி ஆதரிக்கும் என்றார்.

“ரணில் விக்கிரமசிங்க ஓர் ஆபத்தான நபர். படலந்த சித்திரவதைக் கூடத்தை நடத்தியமை குற்றச்சாட்டுகளால் கறைபட்டவர்” என்று நாகமுவ கூறினார்.

## புதிய தூதுவர்கள் பிரதமரைச் சந்தித்தனர்



இலங்கையைப் பிரதிநிதித்து வப்படுத்துவதற்காகப் புதிதாக நியமிக்கப்பட்ட தூதுவர்கள் குழு, பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரியவை பிரதமர் அலுவலகத்தில் ஞாயிற்றுக்கிழமை (24) சந்தித்தனர்.

இந்தக் குழுவில் இந்தோனேசியாவிற்கான தூதுவர் திருமதி எஸ்.எஸ். பிரேமவர்தன, பிரேசிலுக்கான தூதுவர் திருமதி சி.ஏ.சி.ஐ. கொலொன்னே, மாலைதீவுக்கான உயர்ஸ்தானிகர் எம்.ஆர். ஹசன், துருக்கிக்கான தூதுவர் எல்.ஆர்.எம்.என்.பி.ஜி. பி.பி. கதுருகமுவ, நேபாளத்திற்கான தூதுவர் திருமதி ருவந்தி தெல்பிட்டிய, கொரியக் குடியரசுக்கான தூதுவர் எம்.கே. பத்மநாதன் மற்றும் ஓமான் சுல்தானகத்திற்கான தூதுவர் திரு. டபிள்யூ.ஏ.கே.எஸ். டி அல்விஸ் ஆகியோர் அடங்கியிருந்தனர்.

இலங்கையுடனான நல்லுறவை மேம்படுத்துதல், சர்வதேச அரங்கில் இலங்கையின் நற்பெயரை உயர்த்துதல், மற்றும் தரமான முதலீடுகளை ஈர்த்தல் ஆகியவற்றிற்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டியதன் அவசியத்தை, பிரதமர் புதிய தூதுவர் குழுவினருக்குச் சுட்டிக்காட்டினார்.

அவர்கள் பொறுப்பேற்க இருக்கும் நாடுகளில் காணப்படும் வாய்ப்புகள் குறித்துக் கருத்துக்களைப் பரிமாறிக் கொண்ட பிரதமர், அவர்களின் எதிர்காலப் பணிகளுக்குத் தனது வாழ்த்துக்களைத் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் பிரதமரின் செயலாளர் பிரதீப் சபுதந்திரி மற்றும் பிரதமரின் மேலதிகச் செயலாளர் திருமதி சாகரிகா போகஹவத்த ஆகியோரும் கலந்துகொண்டனர்.

## “விளக்கை அணைத்து விளையாட வேண்டாம்”

கொழும்பில் உள்ள அமரி ஹோட்டலில் கட்சித் தலைவர்களின் பங்கேற்புடன், ஞாயிற்றுக்கிழமை (24) அன்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே மனோ கணேசன் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மேலும், வெள்ளிக்கிழமை பார்த்து இந்த விடயத்தை நீதிமன்றத்திற்கு எடுத்துச் சென்று விளக்கை அணைத்து விளையாட வேண்டாம் என்று எனது அன்பு நண்பர் தோழர் அனுரவிடம் கேட்டுக்கொள்கிறேன்.

அரசியல் ஜனநாயகத்தைப் பாதுகாக்க நாம் ஒன்றுபட்டு கட்சி வேறுபாடுகள் இல்லாமல் செயல்பட வேண்டும்.

ஆரம்பத்தில் கூறப்பட்ட மத்திய வங்கி மோசடிக்கு எதிராக ஏன் நடவடிக்கை எடுக்கப்படவில்லை? இது நிச்சயமாக 100% அரசியல் பழிவாங்கல் என்றும் மனோ கணேசன் கூறினார்.

ரணில் மீது சட்டம் பாய்ந்ததால்

# “ராஜபக்ஷர்கள் நடுங்குகின்றனர்”

“வடக்கில் மக்களுக்குரிய காணிகளை முழுமையாக விடுவிக்கும் நிலைந்நாட்டிலேயே ஜனாதிபதி இருக்கின்றார். தையிட்டி விகாரைப் பிரச்சினைக்கும் சுமுக தீர்வு காணப்படும்” என்று கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்தார்.

தேசிய மக்கள் சக்தியின் யாழ்.மாவட்ட அலுவலகத்தில் ஞாயிற்றுக்கிழமை (24) அன்று நடைபெற்ற விசேட ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

“ரணில் விக்ரமசிங்கவை நெருங்க முடியாது, அவர் மீது கை வைக்க முடியாது, அவர் சர்வதேச இராஜந்திரம் தெரிந்தவர், நரித்தனமானவர், அவரோடு விளையாட முற்பட வேண்டாம் என எதிரணியினர் கூறி வந்தனர்.



இந்நிலையில், அவர் மீது சட்டம் பாய்ந்துள்ளதால் ராஜபக்ஷக்கள் ஆட்டம் கண்டுள்ளனர்.

நாட்டுக்கு தீங்கு, இழப்பு ஏற்படுத்தியது ரணிலோ, ராஜபக்ஷவோ என்பது எமக்கு முக்கியம் அல்ல, எவராக இருந்தாலும் ஊழல், மோசடிகளில் ஈடுபட்டவர்களுக்கு எதிராக சட்டம் தனக்குரிய கடமையை செய்யும்.

ஒரு சில வாரங்களில் வடக்கில் உள்ள அரசியல்வாதிகள் வாழ்விலும் வசந்தம் பிறக்கும் என நினைக்கின்றோம்.

மக்களுக்கு சொந்தமான அனைத்து காணிகளும் விடுவிக்கப்படும். இந்த நிலைப்பாட்டில் ஜனாதிபதி உறுதியாக இருக்கின்றார். தையிட்டி விகாரைப் பிரச்சினையும் தீர்க்கப்படும். வடக்குக்கு வரும் சுற்றுலாப் பயணிகள் மற்றும் முதலீடுகள் தொடர்பில் சில அதிகாரிகள் இழுத்தடிப்பு செய்து வருகின்றனர். அவர்கள் பற்றியும் எமக்கு தெரியும். அவர்களுக்கு எதிராகவும் நடவடிக்கை எடுக்கப்படும்” என்றார்.

## கலாநிதி செந்தூரன் மகேஸ்வரனுக்கு விருது




16 ஆண்டுகளுக்கும் மேலாக இலங்கை, அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய பல்தேசிய நிறுவனங்களில், தரக்கட்டுப்பாடு, மற்றும் பொறியியல் முகாமைத்துவம் ஆகியவற்றில் மேற்கொண்ட சிறந்த பங்களிப்புகளுக்காக கலாநிதி. செந்தூரன் மகேஸ்வரனுக்கு ‘உலகளாவிய பொறியியல் மற்றும் தொழில்நுட்பத்தில் மிகவும் மதிப்பு வாய்ந்த நிபுணருக்கான 2025 விருது’ வழங்கி கௌரவிக்கப்பட்டது.

இவ்விருது வழங்கும் விழா கடந்த ஆவணி 17ஆம் திகதி கொழும்பு கோல்ஃபேஸ் ஹோட்டலில் நடைபெற்றது. இதில், பேராசிரியர்கள், அரசு மற்றும் தனியார் நிறுவனங்கள், கல்வியியலாளர்கள், பல்துறை சாதனையாளர்கள், ஊடகவியலாளர்கள், திரை நட்சத்திரங்கள் மற்றும் இலங்கைக்கான மிஸ் யூனிவேர்ஸ் 2024 உட்பட பலர் ‘வைர விருதுகள் 2025’ விருது வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

கோப்பாய் வடக்கை பூர்வீகமாகக் கொண்ட கலாநிதி செந்தூரன் மகேஸ்வரன் அவர்கள், இளைப்பாறிய இலங்கை வங்கி முகாமையாளர் திரு. மகேஸ்வரன் மற்றும் திருமதி யாழினியின் புதல்வர் ஆவார்.

யாழ்.இந்துக்கல்லூரியின் பழைய மாணவரான இவர், பொறியியலில் இளங்கலையும், பொது முகாமைத்துவம் மற்றும் சர்வதேச திட்ட நிர்வாகத்தில் இரட்டை முதுமாணியும், வட அமெரிக்காவில் கணனி மற்றும் இலத்திரனியல் பொறியியலில் கலாநிதி பட்டமும் பெற்றுள்ளார்.

மேலும் இவர், ஐ.எஸ்.ஓ. தணிக்கையாளர்களின் சர்வதேச பதிவு மற்றும், ஐக்கிய ராச்சியத்தின் பட்டய தர நிர்ணய நிறுவகத்தால் அங்கீகரிக்கப்பட்ட, சர்வதேச தரச்சான்றிதழ் வழங்கும் உரிமத்தை பெற்ற தலைமை அதிகாரியும் ஆவார். அவை தவிர, ஆஸ்திரேலியாவின் பொருளாதாரம் மற்றும் அமைதிக்கான நிறுவனத்தின் இலங்கைக்கான சமாதான தூதுவராகவும் செயற்படுகிறார்.

இவரின் ஆராய்ச்சிகள் சர்வதேச பத்திரிகைகளிலும், சர்வதேச ஆராய்ச்சி மாநாடுகளிலும் இடம்பெற்றுள்ளதுடன், இவை பொறியியல் உலகில் கூடுதல் கவனம் செலுத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது.

மேலும் இவர் சிறந்த பொறியியல் மற்றும் புகழ்பெற்ற ஆராய்ச்சிக்கான கவுரவ விருதுகள் 2025 (சிறந்த சர்வதேச கல்வியாளர்கள் விருது), ஆராய்ச்சி மற்றும் பொறியியலில் சிறந்த பங்களிப்புக்கான அரேபிய வர்த்தக சம்மேளனத்தின் விருதையும், சிறந்த பொறியியல் மற்றும் தொழில்நுட்பத்திற்கான சர்வதேச வணிக விருதுகள் 2025 மற்றும் 2026 இற்கான ஆசியாவின் கவுரவ விருது மற்றும் ஆசியாவின் வாழ்நாள் சாதனையாளர் விருதுகளையும் வென்றுள்ளார்.



## அரசடி பிள்ளையார் ஆலய வருடாந்த கொடியேற்றம்

வ.சக்தி

மட்டக்களப்பு மாவட்டம் வரலாற்று சிறப்பு மிக்க ஆரையம்பதி வெள்ளை மணல் ஸ்ரீ அரசடிப்பிள்ளையார் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் சனிக்கிழமை(23) அன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

சனிக்கிழமை காலை ஆலயத்தில் இடம்பெற்ற, விசேட பூஜை வழிபாடுகளை தொடர்ந்து, வேத பாராயணங்கள் ஒலிக்க பக்தர்களின் அரோகரா கோசத்துடன், அரசடிப்பிள்ளையாருக்கு பக்தி பூர்வமாக கொடியேற்றம் நடைபெறவுள்ளது.

ஐந்து நாட்கள் இடம்பெறும் இப்பெருவிழாவில் எதிர்வரும் 26ஆம் திகதி தேரோட்டமும், 27ஆம் திகதி ஆவணி சதுர்த்தியில் தீர்த்தோற்சவம் நடைபெறவுள்ளது.

ஆலய உற்சக் கிரியைகள் யாவும் ஆலயம் பிரதம குரு ஹரிகர சர்மா தலைமையிலான குழுவினரால் நடத்தப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

## விழிப்புணர்வு பேரணி



எச்.எம்.சுதத் ஹேவா

சிறுவர் துஷ்பிரயோகத்திற்கு எதிராகவும் சிறுவர் உரிமைகள் குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையிலும் இரண்டு பேரணிகள் கொட்டகலை நகரில் சனிக்கிழமை(23) அன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

மேலும் பேரணியுடன் இணைந்து ஒரு வீதி நாடகமும் நடத்தப்பட்டது.

குறித்த பகுதிகளில் உள்ள சமூக ஆர்வலர்களால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த பேரணிகளில் பாடசாலை மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் கலந்து கொண்டனர்.

## கசிப்பு தயாரித்த இருவர் கைது

செ.தி.பெருமாள்

மஸ்கெலியா பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சாமிமலை, ஸ்ரஸ்ப்பி தோட்டம் மற்றும் அந்த தோட்டத்தில் உள்ள ஏனைய பிரதேசங்களில் பாரிய சுற்றிவளைப்பு மேற்கொண்டபோது, சட்ட விரோதமாக கசிப்பு தயாரித்த இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி புஷ்பகுமாரவிற்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவல்களை தொடர்ந்து, சனிக்கிழமை (22) அன்று மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் 95 லிட்டர் கோடா எனப்படும் திரவம் மற்றும் கசிப்பு உற்பத்தி செய்யும் உபகரணங்கள் கைப்பற்றப்பட்டு மஸ்கெலியா பொலிஸாரால் ஹட்டன் நீதி மன்றத்தில் ஆஜர்படுத்தபட்டுள்ளனர்.




சந்தேக நபரை நீதி மன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்ட போது குற்றத்தை ஒப்புக் கொண்டு தலா 15,000/= தண்டம் பணம் செலுத்த வேண்டும் என நீதிபதி உத்தரவிட்டுள்ளனர்.

## மஸ்கெலியாவில் துப்பாக்கி மீட்பு



செ.தி.பெருமாள்

மஸ்கெலியா பொலிஸ் பிரிவின் சாமிமலை, மீரியகோட்டேயில் உள்ள ஒரு காய்கறித் தோட்டத்தில் இருந்து உள்ளூரில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கி மற்றும் இரண்டு SG வகை தோட்டாக்களுடன் ஒருவர் வியாழக்கிழமை (21) அன்று கைது செய்யப்பட்டதாக மஸ்கெலியா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் இங்கிரிய பகுதியைச் சேர்ந்தவர் எனவும் மீரியகோட்டே பகுதியில் சுமார் 02 ஏக்கர் நிலத்தில் தற்காலிகமாக வசித்து வருவதாகவும் தெரியவந்துள்ளது.

மேலும் அவர் காய்கறிகளை பயிரிட்டு வரும் தோட்டத்தில் இருந்து துப்பாக்கி மற்றும் தோட்டாக்கள் கைப்பற்றப்பட்டதாக மஸ்கெலியா பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

சம்பவம் குறித்து மேலும் விசாரணைகள் நடைபெற்று வருவதாகவும் சந்தேக நபரை ஹட்டன் நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நாய்க்குட்டி விற்பதாக கூறி

## பணம், நகை கொள்ளை

சுமனசிறி குணதிலக

புத்தள பொலிஸ் பிரிவுக்குட்பட்ட உனவட்டுன சமனல பகுதியிலுள்ள வீ ஒன்றுக்கு கடந்த 22ஆம் திகதி சென்ற இரு இளைஞர்கள் பணத்தையும் ஒரு தங்க மோதிரத்தையும் திருடிச் சென்றுள்ளனர்.

நாய்க்குட்டி விற்பனைக்கு இருப்பதாகக் கூறி, வீட்டிற்கு வந்த குறித்த இளைஞர்களில் ஒருவர், அந்த வீட்டில் இருந்த 76 வயதுடைய பெண்ணுடன் பேசிக் கொண்டிருந்தபோது, மற்றையவர் பின் கதவு வழியாக வீட்டிற்குள் நுழைந்து, அறை ஒன்றில் இருந்த அலமாரியை உடைத்து, அதிலிருந்த 85,000 ரூபாய் பெறுமதியுடைய தங்க மோதிரத்தையும், பணப்பையில் இருந்த ஐயாயிரம் ரூபாய் பணத்தையும் திருடிச் சென்றுள்ளார்.

அவர்கள் சென்ற பின்னர், அலமாரி உடைக்கப்பட்டிருப்பதை கண்ட அந்தப் பெண், அருகில் வசிக்கும் தனது மகனிடம் இது தொடர்பாக கூறியுள்ளார்.

அதன்படி, அவர், உள்ளூர்வாசிகளுடன் இணைந்து இரண்டு இளைஞர்களையும் பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளார்.

கைது செய்யப்பட்டவர்களில் ஒருவர் ஊவா, பெல்வத்த, முருங்கவத்த பகுதியைச் சேர்ந்த 35 வயதுடைய கூலித் தொழிலாளி என்றும் மற்றையவர் ஊவா, கரத கொல்ல, மொரஹேல 7ஆம் கட்டையை சேர்ந்த 32 வயதுடைய கூலித் தொழிலாளி என்றும் தெரியவந்துள்ளது.








## ‘கருநிலம்’ கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம்

க.அகரன்

மன்னாரின் மேற்கொள்ளப்படும் கனியவள அகழ்வுக்கு எதிராக வவுனியா இளைஞர்களின் ஏற்பாட்டில் சுற்றுச்சூழலுக்கான இளைஞர் நடவடிக்கை அமைப்பின் பங்கேற்புடன் ‘கருநிலம்’ எனும் தொனிப்பொருளில் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் வவுனியா பழைய பேருந்து நிலையத்திற்கு முன்பாக சனிக்கிழமை (23) மாலை இடம்பெற்றது.

“இந்த மண் எங்களின் உரிமை” “எங்கள் எதிர்காலத்திற்கான வளத்தை அழிக்காதே” போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை தாங்கியவாறு கோஷங்களை எழுப்பி இளைஞர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

இதன் பின்னர் பழைய பேருந்து நிலையத்திலிருந்து மணிக்கூட்டு கோபுர சந்தி வழியாக கடை வீதியூடாக சென்று, கொரவப்பதான வீதியில் சென்று தமது ஆர்ப்பாட்டத்தை முடிவுக்கு கொண்டு வந்திருந்தனர்.

இதில் வவுனியா மாவட்ட இளைஞர்கள், மன்னார் மாவட்டத்தில் தொடர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு வரும் இளைஞர்கள், மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் செ.மயூரன், கலைஞர் மாணிக்கம் ஜெகன் உட்பட பலரும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.





## கிணற்றுடன் கார் மோதியதில் நான்கு பேர் படுகாயம்

ரீ.எல்.ஜவ்பர்கான்

மட்டக்களப்பு - கல்முனை வீதியூடாக பயணித்த கார் ஒன்று, காத்தான்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கல்லடி பிரதேசத்தில் வைத்து வீதியோரம் இருந்த ஆலய கிணற்றுடன் மோதி சனிக்கிழமை (23) அன்று விபத்துக்குள்ளாகியுள்ளது.

ஆரையம்பதியை சேர்ந்த குடும்பமொன்று கொழும்பு விமான நிலையம் சென்று மீண்டும் ஆரையம்பதி நோக்கி பயணித்துக் கொண்டிருந்த போது, காரின் வேகக் கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகி முருகன் ஆலய கிணற்றுடன் மோதியுள்ளது.

விபத்து நிகழ்ந்த சமயம் காரில்7 மாத கைக்குழந்தை உட்பட 4 பேர் பயணித்ததுடன், அவர்கள் சிகிச்சைக்காக வைத்தியசா லையில் அனுமதிக்க ப்பட்டுள்ளனர்.

இது தொடர்பான மேலதிக மேலதிக விசாரணைகளை காத்தான்குடி பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.



# வாழ்க்கைச் செலவு குறைக்காவிட்டால் ஆயுட்காலம் குறையும்

இலங்கையில் பணவீக்கம் 0.7% அதிகரித்துள்ளது. கடந்த மாதம், இது 0.3% ஆக இருந்தது. பணவீக்கத்தில் நான்கு புள்ளிகள் அதிகரிப்பு ஒரு சிறிய விடயமாகத் தோன்றினாலும், அது வாழ்க்கைச் செலவில் மிகவும் வலுவான தாக்கத்தை ஏற்படுத்துகிறது.

இந்த நாடு உற்பத்தி பொருளாதாரத்தைக் கொண்ட நாடு அல்ல, இங்கு நுகர்வு மட்டுமே உள்ளது. இந்த நாட்டில் உற்பத்தி செய்யப்படும் அனைத்திற்கும் தேவையான அனைத்தும் வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படுகின்றன.

மனிதன் முதலில் உணவில் தன்னிறைவு அடைய வேண்டும். இதைப் புரிந்துகொண்டு, டி.எஸ்.சேனநாயக்கா இலங்கையில் விவசாய மேம்பாட்டு இயக்கத்தைத் தொடங்கினார். சேனநாயக்கா சமுத்திரம் போன்ற புதிய நீர்த்தேக்கங்களை நிர்மாணித்து விவசாயத்துக்கு உதவினார்.

இது மட்டுமல்லாமல், கல் ஓயா மேம்பாட்டு இயக்கம் போன்ற திட்டங்களையும் அவர் தொடங்கினார். இலங்கைக்கு ஏற்ற விவசாய மாதிரி ஆங்கிலேயர்களால் அறிமுகப்படுத்தப்பட்ட சேனநாயக்கா மாதிரி என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். இருப்பினும், பின்னர் ஆட்சிக்கு வந்த அரசாங்கங்கள் இவற்றை செயல்படுத்த அனுமதிக்கவில்லை.

பிரதமர் ஜோன் கெதத்தலாவல விவசாய இயக்கத்திற்கு தனது ஒப்புதலைத் தெரிவித்த போதிலும், அதிகாரிகள் இந்த விடயத்தை முன்னும் பின்னுமாக இழுத்தனர். எஸ்.டபிள்யூ.ஆர். டி.பண்டாரநாயக்காவின் அரசாங்கம் சாகுபடியை மறந்து விட்டு, அதிகாரப்பூர்வ மொழி மற்றும் பிற தேசிய நோக்கங்களை அரசியல் கருவிகளாகப் பயன்படுத்தியது.

இறுதியில், பண்டாரநாயக்கவைச் சுற்றியுள்ள தொழிலதிபர்கள் அவரைச் சுட்டுக் கொன்றனர். டட்லி சேனநாயக்க விவசாயத்தில் தனது ஆர்வத்தை வெளிப்படுத்தினார். ஆனால், அதிகாரிகள் அவரை முற்றிலுமாக ஏமாற்றினர். திருமதி பண்டாரநாயக்க ஒரு விவசாய போரை ஆரம்பித்தாலும், நமது நாட்டு மக்கள் பொறுமையிழந்ததாலும், அவரது அரசாங்கம் ஊழல் நிறைந்ததாக இருந்ததாலும், அந்த அரசாங்கம் தோற்கடிக்கப்பட்டு ஜே.ஆர். ஆட்சிக்கு வந்தார். ஜே. ஆர். ஆட்சிக்கு வந்தபோது, உலகமயமாக்கல் என்ற கருத்து சக்திவாய்ந்ததாக மாறியது. எனவே, அந்த நேரத்தில், ஜே. ஆர். திறந்த பொருளாதாரத்தை அனுமதிப்பதைத் தவிர வேறு வழியில்லை.

அன்றிலிருந்து, விவசாயத்தை நாம் கைவிட வேண்டியிருந்தது, நெல் வயல்கள் தரிசாக விடப்பட வேண்டும், வெளிநாட்டிலிருந்து முன்பை விட அதிக அரிசியை இறக்குமதி செய்ய வேண்டியிருந்தது. சூப்பர் மார்க்கெட்டுகள் வெளிநாட்டிலிருந்து உறைந்த காய்கறிகளை இறக்குமதி செய்வதோடு இது முடிந்தது. தன்னிறைவு அடையாமல் பணவீக்கத்தைக் குறைக்க முடியாது.

வாழ்க்கைச் செலவு குறையாவிட்டால், மக்களுக்கு நிதிச் சுமை அதிகரிக்கும், வாங்கும் திறன் குறையும், மற்றும் ஒட்டுமொத்த பொருளாதாரத்தில் தாக்கம் ஏற்படும். தனிநபர்கள் தங்கள் செலவுகளைக் குறைக்க, சிக்கன நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியிருக்கும். அரசாங்கம் பணவீக்கத்தைக் கட்டுப்படுத்தவும், அத்தியாவசியப் பொருட்களின் விலைகளைக் குறைக்கவும், வருமானத்தை அதிகரிக்கவும் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்த வேண்டும்

பணவீக்கம் குறைந்தால் வாழ்க்கைச் செலவு குறையும். வாழ்க்கைச் செலவு குறைக்கப்படாவிட்டால் ஆயுட்காலம் குறையும் என்பதை நினைவில் கொள்வது அவசியமாகும்.


தமிழ்Mirror க்கு எழுதுங்கள் www.tamilmirror.lk


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136
Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk



## வாழ்வியல் தரிசனம்

சிரிக்காதவன் தன்னைச் சுருக்கிக்கொள்கின்றார். அக உணர்வினூடாக ஏற்படும் கிளர்ச்சி, புன்னகை, சிரிப்பாகப் பரிணமிக்கின்றது.

நகைப்பூட்டும் விடயங்களைக் கேட்கும் போதும் குழந்தைகளின் குறும்பை முறுவல்களை நோக்கும் போதும் மெல்லிய சிரிப்பு தானாகவே உருவாகின்றது.

சிலர் நகைச்சுவைகளைக் கேட்டதுமே பலத்தை ஓசையுடன் சிரிப்பதுண்டு. திரைப்படங்களில் வில்லன்களின் பார்வையுடன் கூடிய நகைப்பு சற்று வித்தியாசமானது. அடக்கமுடியாத தொடரான சிரிப்பும் ஒருரகம்.

ரசனை உள்ள விடயங்களைக் கூட சிலர் கண்டு கொள்ளவே மாட்டார்கள். உம்மென்று எதுவும் தெரியாததைப் போல இருப்பதுண்டு. இன்னும் சிலருக்கு நகைச்சுவையின் அர்த்தமும் புரிவதில்லை.

சிரிப்பு, ஆனந்தத்தின் இருப்பிடம் ஏன் பிறப்பிடமும் கூட. மனிதன் தனது வாழ்க்கையைச் சந்தோஷமாக வைத்திருக்க கலகலப்பூட்டும் வார்த்தைகளை அதன் அர்த்தங்களைப் புரிந்து கொள்ளவேண்டும். அர்த்தங்களைப் புரிந்துகொள்ள வேண்டும். கவலைகள், ஏக்கங்ளை களைய சுதந்திரமாக ரசனையுடன் சிரிப்பீர்களாக.

– பருத்தியூர் பாலவயிரவநாதன்

# தோற்றுப் போனது ஹர்த்தால்

லக்ஸ்மன்

வடக்கு, கிழக்கில் இராணுவ பிரசன்னத்துக்கு எதிரான நிலைப்பாடுகள் காணப்பட்டாலும் காலம், சூழல் அறிந்து சில முடிவுகளை எடுக்க வேண்டும் என்பதை தமிழரசுக் கட்சியும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் மற்றும் அவருடைய சகாக்களும் நிச்சயம் புரிந்து கொண்டிருப்பார்கள்.

ஹர்த்தால் என்கிற கடையடைப்பு அகிம்சைப் போராட்டங்களின் இறுதி வடிவமாகவே கருதப்படுகிறது. கடுமையான பொது எதிர்ப்பாக இருக்கின்ற ஹர்த்தாலை விடவும் தமது எதிர்ப்பை வேறு எப்படிக் காண்பிப்பது என்கிற நிலையில்தான் ஹர்த்தால் கையில் எடுக்கப்படுவது வழமை.

குசராத்தியைதாய்மொழியாகக் கொண்ட காந்தி, பிரித்தானிய அரசுக்கு எதிராக அதிகம் ஹர்த்தாலை பயன்படுத்தியிருக்கிறார். அதிலிருந்துதான் இந்த ஹர்த்தால் தமிழ் உள்ளிட்ட தெற்காசிய மொழிகளிலும் பரவியதாக பதிவுகள் குறிப்பிடுகின்றன. இவ்வகையான வேலைநிறுத்தம் பங்களாதேசம், பாகிஸ்தான், இந்தியா, இலங்கை போன்ற நாடுகளில் பரவலாக கடைபிடிக்கப்பட்டு வரும் போராட்ட உத்திகளில் ஒன்று என்ற வகையில் நமது நாட்டில் கடந்த காலங்களில் அடிக்கடி நடைபெற்ற ஒன்றாக இருந்திருக்கிறது.

இலங்கையில் ஆயுத யுத்தம் நடைபெற்ற காலங்களில் விடுதலைப் புலிகளால் இந்த ஹர்த்தால் அடிக்கடி அறிவிக்கப்படுவது வழமை. அவ்வேளைகளில், கடைப்பிடிக்கப்பட்ட ஹர்ததாலுக்கும் இப்போதைய நிலைக்கும் நிறையவும் வித்தியாசம் இருக்கிறது. அன்றைய காலங்களில் கடுமையான அழுத்தம் உடைய அச்சத்துடனேயே நடைபெற்றிருந்தது. இருந்தாலும், மக்களால் ஏதோ ஒருவகையில் உரிமை சார்ந்த பிரச்சனைகள் மீதான எதிர்பார்ப்பில் உணர்வு பூர்வமாகவே அனுஷ்டிக்கப்பட்டிருந்தது. ஆயுத யுத்த மௌனிப்புக்குப் பின்பு ஹர்த்தால் தமது தேவைகளை நிவர்த்தி செய்து கொண்டே பொது மக்கள் ஆதரவு கொடுத்தார்கள்.

ஹர்த்தால் வெறுமனே தமிழ் மக்களின் போராட்ட வடிவமாக மாத்திரம் இருக்கவில்லை. அது ஒரு பொதுவான விடயமே. அதற்கான அழைப்பு விடுப்பவர்கள் முடிவில் வெற்றி என அறிவித்தாலும் நடைபெற்றது, அனைவரும் அறிந்த விடயம் அது இருப்பதால் யாரும் சீர் தூக்கிப் பார்ப்பதில்லை.

> **தமிழ் மக்கள் அரசியல் போராட்டம், அகிம்சை, ஹர்த்தால், கடையடைப்பு, பகிஷ்கரிப்பு என்று வன்முறை சாராததாகவே தமிழ் மக்களது போராட்டங்கள் இருந்தது. அவற்றின் பலனின்மையால் மிதவாத தலைமை இளைஞர்களிடம் கைமாறியபோது, ஆயுதப் போராட்டமாக மாறியது மட்டுமல்லாமல், நாட்டில் விரும்பத்தகாத விளைவுகள் ஏற்பட்டது**

2022ஆம் ஆண்டு மே மாத ஆரம்பத்தில் அப்போது நடைபெற்றுக் கொண்டிருந்த ‘அரகலய’ போராட்டத்திற்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில், சுகாதாரம், போக்குவரத்து, ரயில், மின்சாரம் மற்றும் கல்வி ஆகிய துறைகள் உட்பட 2000க்கும் மேற்பட்ட குழுக்கள் அடங்கிய சிவில் அமைப்புகள் மற்றும் தொழிற்சங்கங்கள் இணைந்து ஒரு பொது அடைப்பு என்கிற ஹர்த்தாலை நடத்தின. அரசு, அரசினுடைய இயந்திரத்தை இயக்க முயன்றிருந்தாலும் அரசின் எதிர்பார்ப்பு நிறைவேறவில்லை என்றே சொல்லாம்.

நாட்டின் ஜனாதிபதியாக இருந்த கோட்டபாய ராஜபக்ஷ மற்றும் அரசாங்கம் பதவி விலக வேண்டும் என்று அந்தக் ஹர்த்தால் நடத்தப்பட்டு இருந்தது. ‘அரகலய’ போராட்டத்தின் பலனாக அரசாங்கம், ஜனாதிபதி கோட்டபாய பதவி விலகல், ரணில் விக்ரமசிங்க ஜனாதிபதி இவ்வாறு பல மாற்றங்கள் ஏற்பட்டிருந்தன.

2022இல் நடைபெற்ற ஹர்த்தாலானது 1953ஆம் ஆண்டில் இலங்கையில் முன்னெடுக்கப்பட்ட முழு ஹர்த்தாலுக்கு பின்னர் நடைபெற்ற நாடு தழுவிய ஹர்த்தாலாக பார்க்கப்பட்டது, 1953ஆம் ஆண்டு ஹர்த்தால் காரணமாக அப்போதைய பிரதமர் டட்லி சேனநாயக்க பதவி விலகியிருந்தார். இவ்வாறு பெரும் முடிவுகளுக்கு இலங்கையில் மாத்திரமல்ல, உலகின் வேறு நாடுகளிலும் ஹர்த்தால்கள் காரணமாக இருந்திருக்கின்றன.

வடக்கு, கிழக்கைப் பொறுத்தவரையில், யுத்த மௌனிப்புக்குப் பின்னர் 2015, 2017, 2018 என ஹர்த்தால்கள் தமிழ்ப் பிரதேசங்களில் அனுஷ்டிக்கப்பட்டு வந்திருக்கிறது. இவை தமிழ் மக்களின் அடிப்படை உரிமை பிரச்சினை, அடக்குமுறைகளுக்கு எதிராக நடத்தப்பட்டிருக்கின்றன.

2019ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் கிழக்கில் கிழக்கு மாகாண வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பங்களின் ஏற்பாட்டில் ஒன்று நடைபெற்றது. இந்தக் ஹர்த்தாலானது ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை சபையின் கூட்டத்தொடரை இலக்காகக் கொண்டு சர்வதேசத்தின் நேரடித்தலையீட்டினைக் கோரியும், பொறுப்புக் கூறல் விடயத்தில் இலங்கைக்கு மேலும் கால அவகாசம் வழங்கக் கூடாது எனகோரியும் ஹர்த்தாலுடன், கவனயீர்ப்பு பேரணியும் நடத்தப்பட்டு இருந்தது.

அதேபோன்று, 2020ஆம் ஆண்டுச் செப்டெம்பரிலும் இந்திய இராணுவத்திற்கு எதிராக உண்ணாவிரதமிருந்து உயிர் நீத்த திலீபனின் நினைவேந்தல் நிகழ்வுகளுக்கு இலங்கை அரசாங்கம் நீதிமன்றத்தின் ஊடாகத் தடை விதித்தமைக்கு எதிர்ப்புத் தெரிவித்தும், அரசாங்கத்தின் அடக்குமுறைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் வடக்குக் கிழக்கு மாகாணங்களில் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

2023 ஒக்டோபர் மாதத்தில் இலங்கைத் தமிழரசுக் கட்சி, தமிழ் ஈழ விடுதலை இயக்கம் (ரெலோ), தமிழ் ஈழ மக்கள் விடுதலைக் கழகம் (புளோட்), தமிழ் மக்கள் கூட்டணி, ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (ஈ.பி.ஆர்.எல்.எவ்.), தமிழ்த் தேசியக் கட்சி, ஜனநாயகப் போராளிகள் கட்சி ஆகியன இணைந்து ஒற்றுமையாக ஒரு அறிவிப்பை விடுத்திருந்தன. அது இவ்வாறுதான் இருந்தது “நாட்டில் தமிழ் பேசும் மக்கள் தொடர்ச்சியாக அனுபவித்து வரும் அநீதிகளையும், நீதி மறுக்கப்படுவதையும் உலகத்தின் கவனத்திற்கு மீண்டும் கொண்டு வரும் நோக்குடனும், எமது மக்களின் காணிகள் அபகரிக்கப்பட்டு அவற்றில் பௌத்த விகாரைகள் அமைக்கப்படுவதைக் கண்டித்தும் மயிலத்தமடு - மாதவணை மேய்ச்சல் தரையை ஆக்கிரமித்து இருப்போரை வெளியேற்றக் கோரியும், எமது தாயகமான வடக்கு, கிழக்கு மாகாணங்களில் ஹர்த்தால் எனப்படும் ஒரு பொது முடக்கத்திற்குத் தமிழ்த் தேசியக் கட்சிகளாகிய நாம் ஒன்றிணைந்து அழைப்பு விடுக்கின்றோம்”. இந்தக் ஹர்த்தால் வெற்றிகரமாக நடைபெற்றது என்று சொல்லாம். வடக்கு, கிழக்கை தளமாகக் கொண்டு இயங்கும் முஸ்லிம் அரசியல் கட்சிகளும் இதற்கு ஆதரவு வழங்கியிருந்தன.

அதேநேரத்தில், தமிழ் மக்கள் அரசியல் போராட்டம், அகிம்சை, ஹர்த்தால், கடையடைப்பு, பகிஷ்கரிப்பு என்று வன்முறை சாராததாகவே தமிழ் மக்களது போராட்டங்கள் இருந்தது. அவற்றின் பலனின்மையால் மிதவாத தலைமை இளைஞர்களிடம் கைமாறியபோது, ஆயுதப் போராட்டமாக மாறியது மட்டுமல்லாமல், நாட்டில் விரும்பத்தகாத விளைவுகள் ஏற்பட்டது.

அது 2009 மே 18 முள்ளிவாய்க்கால் வரை தொடர்ந்தது. அதன் பின்னர்த் தமிழ் மக்களின் அரசில் வழிநடத்தல் அரசியல் தலைவர்களிடம் கைமாறியது. ஆயுதப்போராட்டம் நடைபெற்ற காலங்களிலும் ஹர்த்தால்கள் நடைபெற்றிருந்தாலும், முன்னர் நடந்தது போல வட கிழக்கில் மீண்டும் ஹர்த்தால் கடையடைப்பு, பகிஸ்கரிப்புகள் ஆரம்பித்தன. அவற்றினால் பலனேதுமில்லை என அரச தரப்புகள் கூறிக் கொண்டாலும், நடைபெற்றது என்னவோ உண்மையானதே.

இதற்கிடையில் தான் கடந்த 18ஆம் திகதி இலங்கை தமிழரசுக் கட்சியின் அறிவிப்பாக வெளிவந்த ஹர்த்தால் தொடர்பாக நாம் ஆராய்ந்து பார்க்க வேண்டியிருக்கிறது. இந்தக் ஹர்த்தாலானது எழுந்தமானமாக, எந்தவொரு ஆராய்வும் இன்றி, திட்டமிடப்படாத வகையில் எடுக்கப்பட்டது என்பது வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. முதலில் ஒகஸ்ட் 15ஆம் திகதி என அறிவிக்கப்பட்டது. பின் அன்றைய தினம் மடு மாதா திருத்தலத்தின் வருடாந்த திருவிழா என வெளிப்படுத்தப்பட்டதும் பின்னர் 18ஆம் திகதியாக மாற்றப்பட்டது. எவ்வாறாக இருந்தாலும், யாழ்ப்பாணம் நல்லூர் கந்தன் திருவிழா நடைபெற்றுக் கொண்டிருந்த காலம் பொருத்தமற்றதாக ஆகிப்போனது.

முல்லைத்தீவில் நடைபெற்ற சம்பவமானது திடீரென நடைபெற்ற ஒன்றல்ல. வழமையான செயற்பாட்டின் எதிரொலியே. ஆனாலும், பாதுகாப்புத் தரப்பும், அரசாங்கமும் உடனடியாக நடவடிக்கைகளில் இறங்கியிருந்தன. அது ஒருவகையில் பாராட்டத்தக்கதாக இருந்தாலும், அதிகப்படியான இராணுவப் பிரசன்னம் இவ்வாறான நிலைமைகளை தோற்றுவிக்கும் என்பது தான் யதார்த்தம்.

எது எப்படி சொல்லப்பட்டாலும், வடக்கில் கிழக்கில் ஹர்த்தால் தோற்றுப் போனது. பிசுபிசுத்து போனது, வெற்றி பெறவில்லை என்பதே நிலைமை. இந்த நிலைமை எதனால் ஏற்பட்டது. இதனை எவ்வாறு சீர் செய்வது எவ்வாறு என்பது பற்றி இலங்கைத் தமிழரசுக் கட்சி ஆராய்ந்தாக வேண்டும் என்பது போல, தமிழ் மக்களும் ஆய்வுக்குட்படுத்த வேண்டும். ஒற்றுமையாக ஒருமித்த முடிவுடன் தீர்மானங்களை எடுத்து நடைமுறைப்படுத்த வேண்டிய விடயத்தில் எதேச்சதிகாரம் ஒன்றுக்கும் பிரயோசனம் அற்றது என்பது புரிந்து கொள்ளப்பட வேண்டும்.

ஆனால், இந்தத் தடவை நடைபெற்ற ஹர்த்தால் பிசுபிசுப்புடன் முடிந்திருந்தாலும் வெளி உலகிற்கும் அரசாங்கத்திற்கும் ஒரு செய்தி கொண்டு செல்லப்பட்டிருக்கிறது. இது நாட்டுக்கு நல்ல சகுனம் அல்ல என்றெல்லாம் கருத்து வெளியிட முனையும் தமிழ் அரசியல் தரப்பினர் ஹர்த்தால் தோற்றுப் போனது என்பதை முதலில் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

கடிதங்கள்

## இரும்பு வேலி தேவை

நல்லத்தண்ணி, மஸ்கெலியா பிரதான வீதி கடந்த வருடம் காபட் இடப்பட்டு செப்பனிட்ட நிலையில், பிரதான வீதியில் விபத்துகள் ஏற்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

குறிப்பாக லக்ஷபான பகுதி வளைவுகளில் பாரிய பள்ளத்தாக்கு உள்ளதுடன் ஒரு சில பகுதிகள் மவுஸ்ஸாக்கலை நீர் தேக்க கரையோர பகுதிகளாகும்.

எதிர்வரும் டிசெம்பர் மாதத்தில் சிவனடி பாதமலை பருவகாலம் ஆரம்பித்தவுடன் அதிக அளவில் வாகனங்கள் வந்து செல்லும் இந்த வீதியில் இரும்பினால் செய்யப்பட்ட நிரந்தர பாதுகாப்பு வேலி அமைக்க நோர்வூட் பிரதேச வீதி அபிவிருத்தி அதிகார சபை நடவடிக்கை எடுக்க வேண்டும்.என வாகன சாரதிகள் கோரிக்கை விடுக்கின்றனர்.

– செ.தி.பெருமாள்



## கர்ப்ப காலத்தில் தாய், சேய் நலனை

# பாதிக்கும் உளவியல்





சரண்யா பாலகுமார்,
உளவியல் சிறப்பு
கலை,
யாழ்.
பல்கலைக்கழகம்.

**"கர்ப்பிணிப் பெண்களுக்கு குடும்பத்தினரின் அன்பும் ஆதரவும் வழங்கப்படுதல் ஆகும். சீரான மருத்துவ ஆலோசனை, உளவியல் ஆலோசனை, தியானம், சுவாச பயிற்சி, மூடநம்பிக்கையற்ற அறிவுபூர்வமான விழி ப்புணர்வு போன்ற மனஅழுத்தக் கட்டுப்பாட்டு முறைகள் உதவக்கூடியவை. குழந்தை பிறக்கும் முன்பே தாய்க்கு நம்பிக்கை மற்றும் மன உறுதி அளிக்கப்படுவது, பிறந்த பின் தாயும் பிள்ளையும் ஆரோக்கியமான மனநிலையுடன் வாழ வழிவகுக்கும்**

ஒரு பெண்ணுடைய வாழ்க்கை பருவத்தில் புதிய சுகமாகக் கருதப்படுவதே கர்ப்ப காலமாகும். இக்காலப் பகுதியில் தாயுடைய உடல், உள, நலம் மற்றும் வயிற்றில் உள்ள கருவில் பல மாற்றங்களை நிகழ்த்துகின்றன. இந்தக் காலப்பகுதி 10 மாதங்களைக் கொண்ட 40 வாரங்கள் வரையிலான காலப் பகுதியில் படிப்படியாக வளர்ச்சியடைந்து ஒரு பூரணக் குழந்தையாக உலகை வந்தடைகின்றது. இக்காலப் பகுதிகளில் உடல் ரீதியாக அனைவரும் வழங்கும் முன்னுரிமை உள அடிப்படையில் வழங்குவதில்லை. காரணம் உளவியல் தாக்கம் குறித்த பூரண விளக்கம் கர்ப்பகாலப் பெண்களுக்குக் கிடைக்கப் பெறாமையே. இதனால் ஏற்படும் தாக்கங்கள் குழந்தை பிறந்து ஒவ்வொரு காலப் பகுதிகளிலும் நேர் எதிர்த்தாக்கங்களை ஏற்படுத்தி விடுகின்றன. பொதுவாக உளவியலில் ஆரம்பித்து அதை நேரடியாகக் குழந்தைகளின் உடல்நலம், அறிவாற்றல் வளர்ச்சி, மனவெழுச்சியில் மற்றும் சமூக இணைப்பில் பாரிய உலதாகத்தை ஏற்படுத்தி விடுகின்றது. WHO (உலக சுகாதார ஸ்தாபனம்) வெளியிடப்பட்ட அறிக்கையில் சர்வதேச ரீதியில் 10%-20% பெண்கள் கர்ப்ப காலத்தில் உளவியல் அடிப்படையில், பெரும் பாதிப்பை அனுபவிப்பதாக நிரூபிக்கப்பட்டது மற்றும் அமெரிக்கப் பொதுச் சுகாதாரச் சங்கம் கர்ப்ப காலத்தில் பெண்கள் 20% மனதளவில் பாதிக்கப்படுவதாக நிரூபிக்கப்பட்டது.

இது தொடர்பில் Rajarata pregnancy cohort (RaPCo) மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் இலங்கையில் கர்ப்ப காலத்தில் ஆரம்பத்திலேயே (15 வாரங்கள்) 23% பெண்களும், இரண்டாம் காலத்தில் 14% பெண்களும் உளவியல் அடிப்படையில் பாதிப்புகள் அனுபவிப்பதாக நிரூபிக்கப்பட்டது. கர்ப்ப காலத்தில் ஏற்படும் உளவியல் பாதிப்புகள் எதிர்கால தலைமுறையையே பாதிக்கும் என்பதால் இது சமூகத்தில் கவனம் செலுத்த வேண்டிய முக்கியமான பேசு பொருளாகும். இந்த கட்டுரையில் கர்ப்பகால உளவியல் பிரச்சினைகள் மற்றும் அது தாய், சேய் நலன் பாதிப்பு குறித்து ஆராய்வோம்.

* **கர்ப்பகால பயம்** - வீட்டில் புதிதாக ஓர் உயிர் வர போவதை எண்ணி அவர்கள் ஆர்வத்துடன் எதிர்பார்க்கின்ற வேலை கருவுற்ற பெண்ணானவள் பல விடையங்களை எண்ணி அச்சம் கொள்கிறாள். குழந்தை முதல் பிரசவமாக இருந்தால் மற்றும் நீண்ட காலத்திற்கு பின்னர் கர்ப்பம் தரித்திருந்தால், அத்துடன், பல தடவை கருச்சிதைவு ஏற்பட்டு கர்ப்பம் தரித்திருந்தால் குழந்தையை ஆரோக்கியமாக பெற்றெடுப்பது தொடர்பில் அதிக குழப்பமடைந்து பயம் ஏற்படுகின்றது. பிள்ளை அங்குவிதமாக பிறந்து விடுமோ அல்லது பிறப்பு வேலையில் தனக்கோ அல்லது குழந்தைக்கு உயிர் ஆபத்து ஏற்பட்டு விடுமோ, பிரசவம் போதான வலி போன்றவை எண்ணி அச்சம் கொள்கின்ற வேலை அது கருவில் உள்ள குழந்தையினுடைய அறிகையையும் பாதிக்கின்றது.

* **இசைவாக்கம் இன்மை**- ஒரு பெண் கருவுற்றவர்களை எப்படி அதனை ஏற்றுக்கொள்கின்றாள், தன்னை மாற்றிக் கொள்கின்றாள் என்பது கர்ப்ப கால ஆரோக்கியத்தை தீர்மானிக்கும். இக்காலத்தில் காரணமின்றி, பல உணர்ச்சி மாற்றங்கள் ஏற்படுவதால் மற்றும் கர்ப்ப காலத்தில் முன் இருந்த பருவத்தை போல் அல்லாமல், பல உடல் மாற்றங்களும் ஏற்படுவதால் அதற்குப் பொருத்தபாடு அடைவதில் பெண் சிரமம் அடைகின்றாள். மேலும், கர்ப்ப காலத்தில் அவளது குடும்பம் மற்றும் உறவுகள் கணவரின் போதிய ஆதரவை இன்மையினால் கர்ப்ப காலத்திற்கு ஏற்ப தன்னை தயார்படுத்திக்கொள்ள முடியாமல் ஏக்க நிலைக்கு மாறாகின்றாள். இது தாய் பிள்ளை மீது கொண்டுள்ள ஈடுபாட்டையும் நலன் ஆரோக்கியத்தையும் பாதிக்கின்றது.

* **மூடநம்பிக்கைகள்** - கர்ப்ப காலத்தில் பாரம்பரியம் கலாசாரம் என்ற பெயரில் அவரவர் சமூகப் போர்வைக்குள் கர்ப்பகால பெண்கள் சிக்கிக் கொள்கின்றனர். குழந்தை எந்த பாலினம் என்பதில் இருந்து குழந்தை பெற்றெடுப்பது வரை நடை உடை பாவனை உணவு என அனைத்திலுமே இது தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. எடுத்துக்காட்டாக, குழந்தை வயிற்றில் இருக்கும்போது, குங்குமம் சாப்பிட்டால் பிள்ளை வெள்ளையாக பிறக்கும் என்பது ஒரு வகை மூடநம்பிக்கை. ஏனெனில், குழந்தையின் நிறம் அவர்களின் பரம்பரை நிறமூட்டங்களின் மூலமே தீர்மானிக்கப்படும். இப்படி காலத்துக்கு காலம் பல மூடநம்பிக்கைகளுக்கு கர்ப்ப காலத்தில் பெண்கள் முகம் கொடுத்து அதில் மீள முடியாத உள பாதிப்புக்கு ஆளாகின்றனர்.

* **குடும்ப உறவுகளின் தாக்கம்**- குடும்ப உறவுகளின் நிலை மற்றும் குடும்பத் தொடர்பாடல் நேரடியாகக் கர்ப்ப காலத்தைப் பாதிக்கும். உரிய அன்பும் அக்கறையும் எதிர்பார்ப்புகளும் நிறைவேற்றப்படாத பட்சத்தில் இவை படலாம். எப்போதுமே எதிர்மறையான எண்ணங்களைக் கர்ப்ப அடைந்த பெண்ணுக்கு சொல்லுதல், மற்றும் உரிய அரவணைப்புக் கணவனால் கிடைக்கப் பெறாத பட்சத்தில் அது தாயோடு இணைந்து, பிள்ளையின் நலனையும் பாதிக்கின்றது.

* **மன அழுத்தம்**- கர்ப்பக் கால வேளையில் பெண்களின் உடலளவில் மாற்றங்கள் ஏற்படுவதால் தீவிர மனநிலை மாற்றம் கவலை, உணர்ச்சி மாற்றங்கள் ஏற்படுவது உடன் அதிக மன அழுத்தம் காரணமாகச் சுவாசம் சார்ந்த பிரச்சினைகளும் ஏற்படுகின்றன. மேலும், இது நாள் அளவில் தொடர்கின்ற போது நிம்மதியான நித்திரைப் பறிப் போகிறது.

மேலும், இதன் காரணமாகத் தனிமை வெறுப்பு, வீக்கம், பயம், கவலை சோர்வு, கோபம் போன்ற மனநிலைகளை அடிக்கடி எதிர்கொள்கின்றாள். இது இருவரின் நலனையும் தீவிரமாகப் பாதிக்கின்றது. COVID-19 காலத்தில் இதன் தாக்கம் 29.4% எனஆய்வுகள் கூறுகின்றன.

* **பொருளாதார நிலை**- கற்பனையின் குடும்ப பொருளாதாரம் கூட அவள் நலத்தில் தாக்கத்தை ஏற்படுத்து. நான் விரும்பிய உணவையோ, உடையையோ அல்லது ஏதோ ஒன்றை போராட்டத்தின் மத்தியில் அவள் பெறவேண்டிய நிலைக்கு ஆளாகும்போது, ஏக்க நிலைகள் மற்றும் கவலையின் காரணமாக அதிக அளவு உள பாதிப்புக்கு ஆளாகின்றாள். இது இயல்பாகவே வயிற்றில் உள்ள பிள்ளையையும் பாதிக்கின்றது.

* **குழப்பமும் மாயை உணர்வு**- கர்ப்ப காலம் ஒரு நீண்ட கால பகுதி என்பதால் இக்கால பகுதிகளில் பல குழப்ப நிலைகளை கர்ப்பிணி எதிர்கொள்கின்றாள். சிலருக்கு தான் உண்மையாகவே கர்ப்பமாக இருக்கின் றனா?, வயிற்றில் உள்ள பிள்ளை உரி யமுறையில் வளர்ச்சி அடைகின்றதா? ஏன் இன்னும் வயிறு பெரிதாக வில்லை? என பல கேள்விகள் எழுந்து பயம் பதற்ற நிலையை உருவாக்குகின்றது. இன்னும் சில தான் உண்மையாகவே கர்ப்பம் தரித்து விட்டேன் என்பதை உணராமல் செயல்பட ஆரம்பிக்கின்றனர்.

* **உளவியல் ரீதியில் ஆண் பெண் இருவருமே முதிர்ச்சி அடையாத தன்மை** - கர்ப்ப காலத்தில் ஒரு ஆரோக்கியமான சிசுவை பெற்றெடுக்க தம்பதிகள் இருவருமே உடல்ரீதி மாத்திரம் இன்றி உளரீதியாகவும் ஆரோக்கியமாக இருக்க வேண்டும். தமக்கு ஒரு புதிய உயிர் வர போகிறது என்பதை ஏற்றுக் கொள்வதோடு, பிள்ளைப் பேறு குறித்த சரியான அறிவு கொண்டு பயன்படும் மனநிலை மாற்றம் அற்று செயல்படுதல் வேண்டும். தம்பதிகள் இருவரும் இது குறித்த தெளிவின்றி விட்டுக்கொடுப்பு இன்றி செயல்படும் வேலை அது தாய் சிசு இருவரின் ஆரோக்கியத்தையும் பாதிக்கும்.

இவ்வாறு ஏற்படும் உளவியல் பாதிப்புகள் நாளடைவில் பெண்களில் மகப்பேற்றுக்கு பின்னரான மன வடு க்களை ஏற்படுத்துவதோடு, பிற்பட்ட பிள்ளைகளின் எதிர்கால வாழ்க்கையும் சீர்குலைத்து விடுகின்றது. எனவே, இன்றைய கால கட்டிடத்தில் கர்ப்ப கால பெண்களுக்கு இதுகுறித்த அறிவு மிகவும் அவசியமானது. இவை, தாயின் உடல் நலம் மட்டுமின்றி, குழந்தையின் மனநிலைக்கும் வளர்ச்சிக்கும் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும். சமூக ஆதரவு இல்லாமை, குடும்ப சண்டைகள், பொருளாதார பிரச்சினைகள் போன்றவை இந்த மன அழுத்தங்களை மேலும் அதிகரிக்கும்.

இவ்வாறான பாதிப்புகளில் இருந்து மீட்பதற்கான முக்கியமான வழி, கர்ப்பிணிப் பெண்களுக்கு குடும்பத்தினரின் அன்பும் ஆதரவும் வழங்கப்படுதல் ஆகும். சீரான மருத்துவ ஆலோசனை, உளவியல் ஆலோசனை, தியானம், சுவாச பயிற்சி, மூடநம்பிக்கையற்ற அறிவுபூர்வமான விழி ப்புணர்வு போன்ற மன அழுத்தக் கட்டுப்பாட்டு முறைகள் உதவக்கூடியவை. குழந்தை பிறக்கும் முன்பே தாய்க்கு நம்பிக்கை மற்றும் மன உறுதி அளிக்கப்படுவது, பிறந்த பின் தாயும் பிள்ளையும் ஆரோக்கியமான மனநிலையுடன் வாழ வழிவகுக்கும்.

# இலங்கையின் முதல் தேசிய AI கண்காட்சி மற்றும் மாநாடு



இலங்கையின் டிஜிட்டல் முன்னேற்றத்தில் மாற்றத்திற்கான தளத்தை அமைப்பதற்காக, 2025 செப்டெம்பர் 29,30 திகதிகளில் நடைபெறவுள்ள முதலாவது தேசிய AI கண்காட்சி மற்றும் மாநாட்டை அறிமுகப்படுத்தி, ஒரு புதிய யுகம் முன்னெடுக்கப்படவுள்ளது.

ஆசியா-பசிபிக் பிராந்தியத்தில் முன்னணி செயற்கை நுண்ணறிவு மையமாக இலங்கையை நிலைநிறுத்துவதற்கான நாட்டின் முயற்சியாக அமையவுள்ள இந்த முன்னோடியான நிகழ்வு, AI பயன்பாட்டை அனைத்து பொருளாதார துறைகளிலும் விரைவுபடுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தேசிய AI கண்காட்சி மற்றும் மாநாடு, செயற்கை நுண்ணறிவு சார்ந்த எதிர்கால நோக்கில் இலங்கையின் பயணத்தை முன்னெடுக்க உருவாக்கப்பட்ட ஒரு முக்கியமான தேசிய தளமாக இருக்கும். 2025ஆம் ஆண்டில் சுமார் 3.5 பில்லியன் அமெரிக்க டொலர்களாக மதிப்பிடப்படும் நாட்டின் டிஜிட்டல் பொருளாதாரத்தை, 2030ஆம் ஆண்டிற்குள் 15 பில்லியன் அமெரிக்க டொலர்களாக விரிவாக்குவது எனும் மூலோபாயக் கண்ணோட்டத்துக்கு இது நேரடி ஆதரவை வழங்குவதாக அமையும். இந்த வளர்ச்சி பாதையில், AIஇன் பங்களிப்பு 10 முதல் 12 சதவீதம் வரை அமைந்திருக்கும் என கணிக்கப்பட்டுள்ளதால், இலங்கையின் பொருளாதார மாற்றத்தின் முக்கிய அடித்தளமாக AI அமையும்.

டிஜிட்டல் பொருளாதார அமைச்சு மற்றும் SLT-MOBITEL ஆகியவற்றின் வரலாற்றுச் சிறப்புமிக்க மூன்று தரப்புக் கூட்டாண்மை, நாட்டின் தொழில்நுட்ப முன்னேற்றத்தை மேம்படுத்த அவை காண்பிக்கும் அர்ப்பணிப்பான ஒற்றுமையை வெளிப்படுத்துகிறது. SLASSCOM இன் பங்களிப்புடன் இந்த கைகோர்ப்புக்கு மேலும் வலிமை சேர்க்கப்பட்டுள்ளது.

நிகழ்வின் Ecosystem பங்காளராக SLASSCOM மற்றும் தொழில்னுட்பப் பங்காளராக Huawei ஆகியன இணைந்துள்ளதனூடாக, இலங்கையின் டிஜிட்டல் வெளியில் வளர்ச்சியை தூண்டுவதில் காண்பிக்கும் அர்ப்பணிப்பு வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இந்தக் கட்டமைப்பு, இலங்கையின் விரிவான டிஜிட்டல் பொருளாதார இலக்குகள் மற்றும் நாட்டை பிராந்தியத் தொழில்நுட்ப முன்னோடியாக உருவாக்கும் நீண்டகாலக் கண்ணோட்டத்துடன் சிறப்பாக ஒத்திசைவாக உள்ளது. இதன் மூலம் அனைவரும் சமமாக பயனடையக்கூடிய உள்ளடக்கிய வளர்ச்சி, நாட்டின் ஒவ்வொரு குடிமகனையும் சென்றடைவதை உறுதிசெய்யும்.

இரு நாட்கள் நடைபெறவுள்ள இந்த முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு, SLT-MOBITEL நிறுவனத்தின் ஆதரவுடன், உலகத் தரத்திலான நவீன தொழில்நுட்பங்களை உள்ளூர் தொழில் துறைகளுக்கு கொண்டு வரும். இது, இலங்கையின் தொழில்நுட்ப எதிர்காலத்தை வடிவமைக்கும் AI புத்தாக்கங்களுக்கு, வணிக நிறுவனங்கள், நிபுணர்கள் மற்றும் பொதுமக்கள் முன்னெப்போதும் இல்லாத அளவிலான அணுகலை வழங்கும். இந்த மாநாடு, இலங்கையின் AI பயணத்தில் முக்கியத்துவம் வாய்ந்த பொறுப்பான AI ஆட்சி, நம்பிக்கை மற்றும் ஒழுக்கம், நடைமுறைப்படுத்தும் சவால்கள், வங்கித் துறை மற்றும் நிதி சேவைகள், சுகாதாரம், கல்வி, வேளாண்மை, சிறு மற்றும் நடுத்தர தொழில்கள் போன்ற துறைகளில் துறைசார்ந்த பயன்பாடுகள் போன்ற அத்தியாவசிய தலைப்புகளை விவாதிக்கும்.

SLT-MOBITEL இன் தவிசாளர் கலாநிதி. மோதிலால் டி சில்வா கருத்துத் தெரிவிக்கையில், "இலங்கையின் தேசிய தகவல் தொடர்பாடல் தொழினுட்ப தீர்வுகள் வழங்குனர் எனும் வகையில் SLT-MOBITEL, AI இன் ஆற்றலை நன்கு உணர்ந்துள்ளது. நாட்டின் டிஜிட்டல் எதிர்காலத்தை வழிநடத்துவது எமது பொறுப்பாக அமைந்துள்ளது. நாடு முழுவதிலும் ஏற்கெனவே நாம் SLT-MOBITEL இன் சொந்த புத்தாக்கங்களான Hello AI மற்றும் AI Pazz போன்றவற்றினூடாக AI ஒருங்கிணைப்பை நாம் மேம்படுத்திய வண்ணமுள்ளோம். அதனூடாக, தினசரி வாழ்க்கை மற்றும் வியாபார செயற்பாடுகளை ஸ்மார்ட்டான தொழினுட்பங்கள் எவ்வாறு மேம்படுத்தும் என்பதை வெளிப்படுத்தி வருகிறோம். தேசிய AI கண்காட்சி மற்றும் மாநாட்டினூடாக, சகல சமூகங்களையும் சேர்ந்த ஒவ்வொரு இலங்கையருக்கும் AI புரட்சியில் பங்கேற்று அதன் பலனை அனுபவிப்பதற்கான வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு எம்மை அர்ப்பணித்துள்ளோம்" என்றார்.

# இலங்கையில் Englander




ரிச்சர்ட் பீரிஸ் அன்ட் கம்பனி பிஎல்சி, மெத்தை தொழினுட்ப நிறுவனமான Englander International உடன் இணைந்து சர்வதேச அங்கீகாரம் பெற்ற மெத்தைகளை இலங்கை சந்தையில் அறிமுகம் செய்துள்ளது. அதற்காக இல. 69, ஹைட் பார்க் கோனர், கொழும்பு-02 இல் புதிய Englander காட்சியறையை திறந்துள்ளது.


இந்த அங்குரார்ப்பண நிகழ்வில் இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜுலி சங் பங்கேற்றதுடன், Englander International இன் தலைவர் லூ பேஜ் பிரதம அதிதியாக கலந்து கொண்டார். வாடிக்கையாளர்களுக்கு நவீன புத்தாக்கம், சௌகரியம் மற்றும் சிறந்த வடிவமைப்பு ஆகியவற்றை பெற்றுக் கொடுப்பதற்கான ரிச்சர்ட் பீரிஸ் குழுமத்தின் அர்ப்பணிப்பை இந்த காட்சியறை மீள உறுதி செய்துள்ளது. இலங்கையில் Englander மெத்தை வகைகளை உற்பத்தி செய்வதற்கான அங்கீகாரத்தைப் பெற்றுள்ள இந்தக் குழுமத்துக்கு, நவீன ஹயிபிரிட் தொழினுட்பங்களைப் பயன்படுத்தி, memory foam முதல் latex மற்றும் Inner Spring ஆகியவற்றைக் கொண்டு உயர் தர மெத்தைகளை தயாரித்து வழங்கக்கூடியதாக இருக்கிறது.

1894ஆம் ஆண்டு நிறுவப்பட்ட Englander International தொடர்ச்சியாக விசேடத்துவம் வாய்ந்த உறங்கல்சார் தயாரிப்பு தீர்வுகளை தயாரித்து விநியோகிக்கிறது. சர்வதேச அங்கீகாரத்தைப் பெற்றுள்ளதுடன், நிலைபேறான மூலப்பொருட்களைக் கொண்டு தயாரிக்கப்படும் Englander மெத்தைகள், சிறந்த சௌகரியம் மற்றும் மேம்படுத்தப்பட்ட குளிர்மைத் தன்மையை வழங்குவதுடன், நவீன ஆய்வுகளையும், சிறந்த தயாரிப்பு வடிவமைப்பையும் ஒன்றிணைத்து பிரத்தியேகமான உறங்கல் அனுபவங்களை வழங்கிய வண்ணமுள்ளது. உயர் தரம் வாய்ந்த உறங்கல் தீர்வுகளை விநியோகிப்பதில் கவனம் செலுத்தும் Englander மெத்தைகள், நீடித்த உழைப்பு, சிறந்த வடிவமைப்பு மற்றும் thermal comfort தொழினுட்பத்தையும் கொண்டுள்ளதால், எந்தவொரு நபருக்கும் புத்துணர்வான உறக்க அனுபவத்தை வழங்கும்.

இலங்கையில் Englander இன் பிரவேசம் தொடர்பில் Englander International இன் தலைவர் லூ பேஜ் குறிப்பிடுகையில், "எமது நோக்கத்தினூடாக எமது செயற்பாடுகள் வலுவூட்டப்படுவதுடன், அதனூடாக நவீன வினைத்திறனைக் கொண்ட தயாரிப்புகள் உருவாக்கப்படுகின்றன. பெருமளவான மக்களுக்கு இயலுமானவரை நுணுக்கமான ரீதியில் வடிவமைக்கப்பட்ட தயாரிப்புகளை வழங்கி எமது நீண்ட பயணத்தை தொடர முடிந்துள்ளது. இலங்கையில் எமது புதிய காட்சியறையினூடாக, எமது பயணத்தில் புதிய அத்தியாயம் ஏற்படுத்தப்பட்டுள்ளதுடன், எதிர்காலத்துக்காக எமது புகழ்பெற்ற நாமத்தினூடாக சிறந்த உறக்க அனுபவங்களை ஏற்படுத்திக் கொடுக்க எதிர்பார்க்கிறோம்" என்றார்.

ரிச்சர்ட் பீரிஸ் அன்ட் கம்பனி பிஎல்சியின் பணிப்பாளர் சபை இயக்குனர் ஷிரோன் குணரட்ன கருத்துத் தெரிவிக்கையில், "Englander International உடன் கைகோர்த்து, எமது வாடிக்கையாளர்களுக்கு எதிர்கால வாய்ப்புகளை எய்துவதற்கு அவசியமான வலுவூட்டலை பெற்றுக் கொடுக்கும் சிறந்த உறக்கம் மற்றும் ஓய்வை வழங்கும் எமது முயற்சியின் விரிவாக்கமாக Englander International உடனான எமது செயற்பாடுகள் அமைந்துள்ளன. எமது தவிசாளர்/ பிரதம நிறைவேற்று அதிகாரி/முகாமைத்துவ பணிப்பாளரான கலாநிதி. சேன யத்தெஹிகே அவர்களின் மூலோபாய வழிகாட்டலினூடாக வழிநடத்தப்படும் நாம், இலங்கையில் உலகத் தரம் வாய்ந்த உறங்கல்சார் தொழினுட்பத்தை அறிமுகம் செய்வதில் பெருமை கொள்கிறோம். புதிய மற்றும் வளர்ந்து வரும் தொழினுட்பங்களினூடாக உள்நாட்டு சந்தையை மேலும் நவீன மயப்படுத்தி, சிறந்த உறக்கம், ஆரோக்கியம் மற்றும் சௌகரியத்தை மேம்படுத்துகிறோம்." என்றார்.





பெய்ஜிங்

கட்டுமான பணியின்போது

# பாலம் இடிந்ததில் 12 தொழிலாளர்கள் பலி

சீனாவில் கட்டுமானத்தின்போது பாலம் இடிந்து விழுந்த்தில் 12 தொழிலாளர்கள் உயிரிழந்துள்ளமை குறித்து அதிகாரிகள் விசாரணை நடத்தி வருகின்றனர்.

சீனாவின் கிங்காய் மாகாணத்தில் பிரதான ஆற்றின் மீது ரயில்வே பாலத்திற்கான கட்டுமான பணிகள் நடந்து வரும் நிலையில், சம்பவத்தன்றான வெள்ளிக்கிழம (22) அதிகாலை 3 மணியளவில் பாலத்தின் ஒரு பகுதி இடிந்து விழுந்துள்ளது. இதில் பாலத்தின் மீது இருந்த 16 தொழிலாளர்கள் ஆற்றில் விழுந்துள்ளனர்.

இது குறித்து தகவல் அறிந்த மீட்பு குழுவினர் அங்கு விரைந்து, ஆற்றில் விழுந்தவர்களை தேடும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளனர். அத்துடன், படகுகள், ஹெலிகொப்டர் மற்றும் ரோபோக்கள் மூலமாக தேடும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதில் 12 தொழிலாளர்களின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளனர் என்றும் மேலும் 4 தொழிலாளர்களை காணவில்லை எனவும் மீட்பு குழுவினர் தெரிவித்துள்ளனர்.

பாலம் இடிந்து விழுந்தமை குறித்து அதிகாரிகள் விசாரணை நடத்தி வருகின்றனர்.

மாஸ்கோ

போர் நிறுத்தத்திற்கான

# புட்டினின் நிபந்தனைகளை ஏற்குமா உக்ரைன்?



மூன்றரை ஆண்டுகளுக்கு மேலாக நடந்துவரும் போரை முடிவுக்கு கொண்டுவர உக்ரைனுக்கு 3 முக்கிய நிபந்தனைகளை ரஷ்யா ஜனாதிபதி புட்டினுக்கு விடுத்திருப்பது சரவதேச அரசியல் களத்தில் முக்கியத்துவம் பெற்றுள்ளது.

தொடரும் ரஷ்யா, உக்ரைன் போரை முடிவுக்கு வருவதற்காக அண்மையில் புட்டின், ஜெலன்ஸ்கி ஆகியோரை ஜனாதிபதி ட்ரம்ப் சந்தித்து பேசியுள்ளர்.

இதன் தொடர்ச்சியாக போர் நிறுத்தம் என்ற இறுதிக்கட்டத்தை நோக்கி ரஷ்யா, உக்ரைன் நகர்ந்துள்ளது. எனினும், போர் நிறுத்தத்திற்கு ரஷ்யா தரப்பில் வைக்கப்பட்ட கட்டுப்பாடுகளை உக்ரைன் நிராகரித்தது. ரஷ்யா கைப்பற்றிய இடங்களை விட்டுத்தர முடியாது, நேட்டோ அமைப்பு இணைவது தடுக்க முடியாது, போன்ற உக்ரைனின் பதில்கள் ரஷ்யாவை அதிருப்தி அடைய செய்தது. இதற்கு உக்ரைன் மீது மீண்டும் தாக்குதலை ரஷ்யா உக்கிரமாக தொடங்கியுள்ளது.

இந்நிலையில், தான் நேட்டோ அமைப்பு இணையும் முடிவை கைவிட வேண்டும், டொன்பாஸ் பிராந்தியத்தை விட்டுக்கொடுக்க வேண்டும். உக்ரைனில் இருக்கும் மேற்கிந்திய படைகளை திருப்பி அனுப்பவேண்டும். போர் நிறுத்தத்திற்கு 3 நிபந்தனைகளை ரஷ்யா விதித்துள்ளது. ஏற்கெனவே பாஸ்கோவில் அமைதி பேர்ச்சுவார்தை நடத்தும் ரஷ்யாவின் யோசனையை உக்ரைன் நிராகரித்த நிலையில், புதினின் நிபந்தனைளை ஏற்குமா என்று எதிர்பார்ப்பு எழுந்துள்ளது.

காசா

# "காசாவில் கடும் உணவு பஞ்சம்"

## உடனடி நடவடிக்கை இல்லையெனில் பேரழிவு

காசா நகரில் உணவுப் பஞ்சம் ஏற்பட்டுள்ளதாக ஐ.நா. நிபுணர்கள் அறிவித்துள்ளனர். இது மனிதனால் உருவாக்கப்பட்ட பேரழிவு என்றும், உடனடியாக நடவடிக்கை எடுக்காவிட்டால் உயிரிழப்புகள் அதிகரிக்கும் என்றும் அவர்கள் எச்சரித்துள்ளனர்.

காசாவில் நிலவும் மோசமான சூழ்நிலையை வெளிச்சம் தற்போதைய சூழல் போட்டுக் காட்டுகிறது. இந்த அமைப்பு, காஸாவில் உணவுப் பஞ்சத்திற்கான மூன்று முக்கிய காரணிகளையும் கண்டறிந்துள்ளது. 2004ஆம் ஆண்டு இந்த அமைப்பு தொடங்கப்பட்டதிலிருந்து இதுவரை நான்கு முறை மட்டுமே பஞ்சத்தை அறிவித்துள்ளது. கடைசியாக சூடானில் கடந்த ஆண்டு பஞ்சம் அறிவிக்கப்பட்டது.

"இந்த பஞ்சம் முற்றிலும் மனிதனால் உருவாக்கப்பட்டது. இதைத் தடுத்து நிறுத்த முடியும்" என்று அறிக்கை ஒன்று கூறுகிறது. மேலும், "விவாதங்கள் மற்றும் தயக்கங்களுக்கு நேரமில்லை. பட்டினி வேகமாக பரவி வருகிறது. உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். தாமதம் ஏற்பட்டால், உயிரிழப்புகள் அதிகரிக்கும்" என்றும் எச்சரித்துள்ளது.

உடனடியாக போர் நிறுத்தத்தை அமுல்படுத்த வேண்டும். காசா பகுதிக்கு மனிதாபிமான உதவிகள் கிடைக்க வழி செய்ய வேண்டும். உணவு, சுகாதாரம், தண்ணீர் போன்ற அடிப்படை வசதிகளை உடனடியாக வழங்க வேண்டும். இல்லையென்றால், உயிரிழப்புகள் அதிகரிக்கும் என்று ஐ.நா. எச்சரித்துள்ளது.

ராஞ்சி

# ஆயுள் கைதிகள் 51 பேருக்கு விடுதலை




ஜார்க்கண்ட் முதல்வர் ஹேமந்த் சோரன் தலைமையில் மாநில தண்டனை மறுஆய்வு வாரிய கூட்டம் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் மாநிலத்தின் பல்வேறு சிறைகளில் ஆயுள் தண்டனை அனுபவிக்கும் 51 கைதிகளை விடுவிக்க முதல்வர் ஒப்புதல் அளித்துள்ளார்.

இதுகுறித்து அதிகாரிகள் கூறுகையில், "கடந்த 2019 முதல் 619 கைதிகள் விடுவிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் 470 பேர் பல்வேறு சமூக நலத் திட்டங்களின் பலன்களைப் பெறுகின்றனர். தற்போது விடுவிக்கப்படும் கைதிகளின் குடும்பப் பின்னணியை ஆய்வு செய்து அவர்களின் வாழ்வாதாரத்துக்கான திறன் மேம்பாட்டு பயிற்சி மற்றும் சமூக நலத்திட்டப் பலன்களை உறுதி செய்ய முதல்வர் உத்தரவிட்டுள்ளார்" என்றார்.

சேலம்

# தந்தை-சித்தியை துண்டாடியது ஏன்?



இரட்டை கொலை தொடர்பாக கைதான வாலிபர் பொலிஸாரிடம் பரபரப்பு வாக்குமூலம் கொடுத்துள்ளார்.

சேலம் மாவட்டம் பூசாரிக்காட்டை சேர்ந்தவர் பழனிசாமி (வயது 45). இவர்களுக்கு ஆகாஷ் (23) என்ற மகன் உள்ளார். இவருடைய முதல் மனைவி ஜெயந்தி. பிரிந்து சென்றுவிட்டார்.

இதனையடுத்து, கணவரை பிரிந்து 17 வயது மகளுடன் வசித்து வந்த ஜெயலட்சுமி (40) என்பவரை பழனிசாமி 2ஆவதாக திருமணம் செய்து 2 மகன்மாருடன் ஒரே வீட்டில் வசித்து வந்தார்.

இந்த நிலையில், பழனிசாமி மற்றும் ஜெயலட்சுமி ஆகியோரை கடந்த 16ஆம் திகதி முதல் காணவில்லை என பொலிஸாருக்கு தகவல் கொடுக்கப்பட்டது. அதன்பேரில் சந்தேகத்தின்பேரில் ஆகாஷை பிடித்து விசாரணை நடத்தியுள்ளனர்.

விசாரணையில் அவர், தந்தை பழனிசாமி மற்றும் சித்தி ஜெயலட்சுமி ஆகியோரை இறைச்சி வெட்டும் கத்தியால் துண்டு, துண்டாக வெட்டிக் கொன்றதும், உடல் பாகங்களை 3 சாக்குப்பைகளில் மூட்டையாக கட்டி ஏகாபுரம் மற்றும் தாழையூர் ஏரிகளில் வீசியதும் தெரியவந்தது. இதற்கு ஜெயலட்சுமியின் மகளும் உடந்தையாக இருந்துள்ளார். இதை கேட்டு அதிர்ச்சி அடைந்த பொலிஸார் அந்த ஏரிகளுக்கு சென்று உடல் பாகங்களை மீட்டனர்.

மேலும் அவர் பொலிஸாரிடம் பரபரப்பு வாக்குமூலம் அளித்துள்ளார்.

அதில், "சமீப காலமாக தந்தை பழனிசாமி சித்தி மகளிடம் தவறாக நடக்க முயன்றார். இதுகுறித்து தங்கை என்னிடம் ஏற்கெனவே தெரிவித்தார். கடந்த 15ஆம் திகதி இரவு மீண்டும் எனது தந்தை, தங்கையிடம் தவறாக நடந்து கொண்டார். இதை பார்த்து ஆத்திரமடைந்த நான், தந்தையை பிடித்து கீழே தள்ளினேன். இதனை தடுத்த சித்தி ஜெயலட்சுமி என்னை அடிக்க பாய்ந்தார். இதனால் கோபத்தின் உச்சிக்கு சென்ற நான், தந்தை மற்றும் சித்தி ஜெயலட்சுமியை இறைச்சி வெட்டும் கத்தியால் தலை, கை, கால்களை தனித்தனியாக வெட்டினேன். பின்னர் உடல் பாகங்களை தங்கையுடன் சேர்ந்து மோட்டார் சைக்கிளில் எடுத்து சென்று ஏகாபுரம், தாழையூர் ஏரிகளில் வீசினேன்" என்றார்.

இங்கிலாந்து பிறீமியர் லீக்:

# சிற்றியை வென்ற டொட்டென்ஹாம்



இங்கிலாந்து கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான பிறீமியர் லீக் தொடரில், மன்செஸ்டர் சிற்றியின் மைதானத்தில் சனிக்கிழமை(23) அன்று நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியை 2-0 என்ற கோல் கணக்கில் டொட்டென்ஹாம் ஹொட்ஸ்பர் வென்றது.

டொட்டென்ஹாம் சார்பாக பிரென்னன் ஜோன்சன், ஜோவா பல்ஹின்ஹா ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர்.

தென்னாபிரிக்கக் குழாமுக்கு

# திரும்பிய மஹராஜ்



இங்கிலாந்துக்கெதிரான இருபதுக்கு-20 சர்வதேசப் போட்டித் தொடருக்கான தென்னாபிரிக்கக் குழாமில் சுழற்பந்துவீச்சாளரான கேஷவ் மஹராஜ் இடம்பெற்றுள்ளார்.

இதேவேளை, காயத்திலிருந்து குணமடைந்த வேகப்பந்துவீச்சாளர்கள் லிஸாட் வில்லியம்ஸ், மார்கோ ஜன்சன் ஆகியோரும் குழாமில் இடம்பெற்றுள்ளனர்.

இதுதவிர டேவிட் மில்லரும் குழாமுக்குத் திரும்பியுள்ளதோடு, சகலதுறைவீரரான டொனோவன் பெரைராவும் குழாமில் இடம்பிடித்துள்ளனர்.

அந்தவகையில், றஸி வான் டர் டுஸன், ஜோர்ஜ் லின்டி, பிரெனெலன் சுப்ராயன் ஆகியோர் குழாமில் இடம்பெறவில்லை.

குழாம்: ஏய்டன் மார்க்ரம் (அணித்தலைவர்), கொர்பின் பொஷ், டெவால்ட் பிறெவிஸ், டொனோவன் பெரைரா, மார்கோ ஜன்சன், கேஷப் மஹராஜ், கவெனா மபஹா, டேவிட் மில்லர், செனுரன் முத்துசாமி, லுங்கி என்கிடி, லுஹான்-ட்றீ பிறிட்டோறியஸ், ககிஸோ றபாடா, றயான் றிக்கெல்டன், ட்றிஸ்டன் ஸ்டப்ஸ், லிஸாட் வில்லியம்ஸ்.

இத்தாலிய சீரி ஏ தொடர்:

# கிறீமொனெஸேயிடம் தோற்ற மிலன்



இத்தாலியக் கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான சீரி ஏ தொடரில், தமது மைதானத்தில் ஞாயிற்றுக்கிழமை (24) அதிகாலை நடைபெற்ற கிறீமொனெஸேயுடனான போட்டியில் 1-2 என்ற கோல் கணக்கில் ஏ.சி. மிலன் தோற்றது.

மிலன் சார்பாகப் பெறப்பட்ட கோலை ஸ்ராஹின்ஞா பவ்லோவிச் பெற்றதோடு, கிறீமொனெஸே சார்பாக பெடெரிக்கோ பஷிரோட்டோ, பெடெரிக்கோ பொனஸோலி ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர்.

# புஜாரா ஓய்வு



அனைத்து வகையான இந்தியக் கிரிக்கெட்டிலிருந்தும் உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் 37 வயதான செட்டேஸ்வர் புஜாரா ஓய்வு பெற்றுள்ளார்.

இறுதியாக அவுஸ்திரேலியுக்கெதிரான உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிப் போட்டியில் இந்தியாவுக்காக விளையாடியிருந்த புஜாரா, 103 டெஸ்ட்களில் 43.60 என்ற சராசரியில் 7,195 ஓட்டங்களைப் பெற்றிருந்தார். ஐந்து ஒருநாள் சர்வதேசப் போட்டிகளிலும் புஜாரா விளையாடியிருந்தார்.

ஆசியக் கிண்ணத் தொடருக்கான

# ஆப்கானிஸ்தான் குழாமில் ஸட்ரான்



ஆசியக் கிண்ணத் தொடருக்கான ஆப்கானிஸ்தான் குழாமில் துடுப்பாட்டவீரர் இப்ராஹிம் ஸட்ரான், சுழற்பந்துவீச்சாளர் ஏ.எம் கஸன்ஃபார், சகலதுறைவீரர் ஷரஃபுதீன் அஷ்ரப் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

இறுதியாக ஆப்கானிஸ்தான் விளையாடிய இருபதுக்கு-20 சர்வதேசப் போட்டித் தொடரான சிம்பாப்வேக்கெதிரான தொடருக்கான குழாமில் இடம்பெற்றிருந்த ஹஸரதுல்லாஹ் ஸஸாய் குழாமிலிருந்து நீக்கப்பட்டுள்ளார்.

குழாம்: ரஷீட் கான் (அணித்தலைவர்), ரஹ்மனுல்லாஹ் குர்பாஸ் (விக்கெட் காப்பாளர்), இப்ராஹிம் ஸட்ரான், டர்விஷ் ரசூலி, செதிகுல்லாஹ் அடல், அஸ்மதுல்லாஹ் ஓமர்ஸாய், கரிம் ஜனட், மொஹமட் நபி, குல்படி நைப், ஷரஃபுதீன் அஷ்ரஃப், மொஹமட் இஷக், முஜீப் உர் ரஹ்மான், ஏ.எம். கஸன்ஃபார், நூர் அஹ்மட், பரீட் அஹ்மட், நவீன்-உல்-ஹக், பஸல்ஹக் பரூக்கி.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிடெட்டினால் திங்கட்கிழமை 25, ஒகஸ்ட் 2025, இல. 8, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.